# ALL NATIONS GOSPEL PUBLISHERS



Copyright ANGP

www.angp-hb.co.za

info@angp.co.za

*Tamil Heart Book*

# மனிதனுடைய இருதயம்

அல்லது

## ஆவிக்குரிய இருதயக் கண்ணடி

(பத்துப் படங்களால் விளக்கப்படும்
ஓர் தொடர் உருவகம்)

— ★ —

படங்களுடன் விளக்கப்பட்ட இச்சிறு புத்தகம், 1732ம் ஆண்டு, பிரான்சு தேசத்தில் உருவாயிற்று. ஆவிக்குரிய இருதயக் கண்ணடி அல்லது இருதயப் புத்தகம் என்று அழைக்கப்படும் இந்நூல், ஆழ்ந்த ஆவிக்குரிய மதிப்புள்ள சத்தியங்கள் நிறைந்திருப்பதால், ஐரோப்பாவின் ஒவ்வொரு மொழியிலும், பல ஆப்பிரிக்க மொழிகளிலும், வெளியிடப் பட்டு எல்லா மக்களாலும், சகல மதத்தினராலும் வாசிக்கப் பட்டு வருகிறது.

கடவுளால் பழைய ஏற்பாட்டில் சொல்லப்பட்டதும், புதிய ஏற்பாட்டில் நிறைவேறியதுமான, "உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிடுவேன்." (எசே. 36 : 26 ; எபி. 8 : 10) என்ற வாக்குத் தத்தத்தை பலர் அனுபவித்து வருகிறார்கள்.

J.R. GSCHWEND

COPYRIGHT
ISBN 0 - 908412 - 14 - 2

E-MAIL: info@angp.co.za
**ALL NATIONS GOSPEL PUBLISHERS**
P.O. Box 2191, PRETORIA, 0001, R.S.A.
(A Gospel Literature Mission financed by donations)
(Reg. No. 1961/001798/08)

Copyright ANGP

“பாவஞ் செய்கிற எவனும் நியாயப் பிரமாணத்தை மீறுகிறான்; நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.”

“அவர் நம்முடைய பாவங்களைச் சுமந்து தீர்க்க வெளிப்பட்டார் என்று அறிவீர்கள்; அவரிடத்தில் பாவம் இல்லை.”

“அவரில் நிலைத்திருக்கிற எவனும் பாவஞ் செய்கிறதில்லை; பாவஞ் செய்கிற எவனும் அவரைக் காணவுமில்லை, அவரை அறியவுமில்லை”

“பிள்ளைகளே, நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதிருங்கள்; நீதியைச் செய்கிறவன் அவர் நீதியுள்ளவராய் இருக்கிறதுபோலத் தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான்.”

“பாவஞ் செய்கிறவன் பிசாசினால் உண்டாயிருக்கிறான்; ஏனெனில் பிசாசானவன் ஆதிமுதல் பாவஞ் செய்கிறான்; பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார்.”

Copyright ANGP

“தேவனால் பிறந்த எவனும் பாவஞ் செய்யான்; ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ் செய்யமாட்டான்.”

“இதனாலே தேவனுடைய பிள்ளைகள் இன்னாரென்றும், பிசாசின் பிள்ளைகள் இன்னாரென்றும் வெளிப்படும்; நீதியைச் செய்யாமலும் தன் சகோதரனில் அன்புகூராமலும் இருக்கிற எவனும் தேவனாலுண்டானவனல்ல.”

i யோவான் 3 : – 10.

# மனிதனின் இருதயம்

உள்ளம் தேவனுடைய ஆலயமாகவோ, அல்லது சாத்தானுடைய இருப்பிடமாகவோ (தொழிற்சாலையாகவோ) இருக்கிறது!

(i யோவான் 3:4–10)

இப்புத்தகத்தை வாசிக்கும்போது, உங்கள் அகத்தில் உள்ளவைகளை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த கண்ணாடியாக தயவு செய்து பாவித்துக் கொள்ளுங்கள்!

நீங்கள் ஒரு புறமதஸ்தரோ, கிறிஸ்தவரோ, அவிசுவாசியோ, அல்லது ஒரு பின்மாற்றக்காரரோ, தேவன் பார்க்கிறபிரகாரம் உங்கள் உள்ளத்தை நீங்கள்தானே, இப் புத்தகத்தின் மூலமாகப் பார்த்துக் கொள்ளலாம்! "மனிதன் முகத்தைப் பார்க்கிறான் கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார்." i சாமு. 16:7. தேவன் முகதாட்சணியம் உள்ளவர் அல்ல!

பிசாசு பொய்க்குப் பிதாவாய் இருக்கிறான். அவன் அந்தகாரத்தின் அதிபதியும் இப்பிரபஞ்சத்தின் தேவனுமாவன். ஆண்களையும், பெண்களையும், ஏமாற்றும்படி ஒளியின் தூதன் வேடம் போடுகிறான். இக்காலத்திலும், முற்காலத்தைப் போல், அனேகர் தங்களைக் கள்ள அப்போஸ்தலர்களாகவும், வஞ்சக ஊழியர்களாகவும், ஏமாற்றி கிறிஸ்துவின்

Copyright ANCP

அப்போஸ்தலர்களாக நடிக்கிறார்கள்! பிசாசு ஒளியின் தூதன் வேடம் போடுவது ஆச்சரியமன்று! (ii கொரிந். 11:13, 14.) இப்பிரபஞ்சத்தின் தேவன் ஆகிய பிசாசு, மனிதர்கள், தேவனுடைய மகிமையைக் காணக்கூடாதபடிக்கும், கிறிஸ்து தங்கள் இரட்சிப்புக்காக மரித்தார் என்பதை விசுவாசியாதப்படிக்கும், அவரில் அன்பு கூறாதப் படிக்கும், மனிதருடைய மனக்கண்களை குருடாக்கியிருக்கிறான்!

எல்லா பாவிகளும், அவிசுவாசிகளும், தேவனுடைய பார்வையில், மரித்தவர்களாகவும், குருடர்களாகவும் இருக்கிறார்கள். அவர்கள் பிசாசின் ஆவியினாலே ஆளப்படுகிறார்கள். (எபேசி. 2:2.) அவர்களுடைய நிர்பந்த நிலையை உணரக்கூடிய விதத்தில் அவர்கள் அகக்கண்கள் திறக்கப்படாவிட்டால் அவர்கள் நித்திய அழிவை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு சந்தேகமில்லை! பாவமில்லை என்று சொல்லுகிறவன் தன்னைத் தானே வஞ்சித்துக் கொள்கிறான்.

பிசாசின் கிரியைகளை அழிப்பதற்கே தேவ குமாரனாகிய இயேசு வெளிப்பட்டார்! (i யோவா 3.8) "தேவனுக்கு கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்போது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்" யாக். 4:7.

இப்புத்தகத்தைப் படிக்கும் போதும், இப்படங்களை ஊடுருவி பார்க்கும் போதும், உங்கள் சொந்த இருதயத்தின் நிலையைப் பார்க்கமுடியும்!

Copyright ANGP

உங்கள் இருதயத்தின் நிலைமையை தேவனுடைய பரிசுத்த ஒளி வெளிப்படுத்திக் காண்பிக்கும் பொருட்டு இடம் கொடுங்கள்!

உங்கள் பாவங்களை மறைக்காமல், அவைகளை ஒத்துக்கொள்ளுங்கள். தேவனுடைய வசனமும் இவ்விதமாக சொல்கிறது. "நமக்கு பாவமில்லை என்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாக இருப்போம். சத்தியம் நமக்குள் இருக்காது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராய் இருக்கிறார்." (i யோவா. 1:1-10.) "தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கிறது."

ஒன்று, பிசாசு உன்னை ஆளவேண்டும். அல்லது தேவன் உன்னை ஆளவேண்டும்! நீ பாவத்திற்கு தாசனாகவோ, இல்லாவிட்டால், தேவனுடைய ஊழியக்காரனாகவோ இருக்கவேண்டும். பாவம் உன் ஜீவியத்தை ஆண்டுகொண்டிருந்தால், அதை மறைக்காதே. தேவனை நோக்கி கூப்பிடு. பாவிகளை விடுதலையாக்க வந்த இயேசுகிறிஸ்து மூலமாக தேவன் உங்களை விடுதலையாக்குவார்!

பாவிகளை இரட்சிக்கவும், சத்துருவின் அந்தகார வல்லமைகளை உடைக்கவும், நம்மை ஆண்டுக்கொண்டிருக்கிற பாவங்களை நீக்கவும், உலகத்திற்கு வந்தவர் இயேசு ஒருவரே! உன்

Copyright ANGP


னுடைய சகல அந்தரங்கங்களையும், அசுத்த எண்ணங்களையும் காணக்கூடிய தேவனுடைய பரிசுத்த சமூகத்தில் நீ நிற்கிறாய் என்பதை உணர்ந்துக் கொள். "தம்மைப்பற்றி உத்தம இருதயத்தோடு இருக்கிறவர்களுக்குத் தம்முடைய வல்லமையை விளங்கப்பண்ணும்படி, கர்த்தருடையக் கண்கள் பூமியெங்கும் உலாவிக் கொண்டிருக்கிறது" ii நாளா. 16:9. "அவருடைய கண்கள் மனுஷருடைய வழிகளை நோக்கியிருக்கிறது; அவர்களுடைய நடைகளை எல்லாம் அவர் பார்க்கிறார்" யோபு. 34:21, 22. "இயேசு எல்லோரையும் அறிந்திருந்தபடியால், அவர்களை நம்பி இணங்கவில்லை." யோவா. 2:24. ஆகையினால், "எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான்!". சங்கீ. 32:1.2 (சங்கீதம் 51 படிக்கவும்). இன்றைக்கும் இயேசு உன்னை அழைக்கிறார். "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாருதல் தருவேன்!" மத்தே. 11:28.

# படங்களின் விளக்கம்

## 1. முதலாம் படம்

உலகத்தின் ஆவியினாலும், மாம்சத்தின் ஆசை இச்சைகளினாலும், ஆளப்பட்டு இருக்கிறவர்களும், உலக மனுஷரும், மறுபடியும் பிறவாதவர்களுமான மனிதர்களின் இருதயத்தின் படத்தை இது வெளிப்

படுத்துகிறது. தேவன் பார்க்கிறவண்ணமாக ஒரு மனிதனுடைய இருதயம் எப்படி இருக்கிறதோ, அதை இந்தப்படம் வெளிப்படுத்துகின்றது.




சிவந்த இரத்தம் கலங்கின கண்களைப் பற்றி, நீதி 23:29-33ல் பின்வருமாறு சொல்லப்பட்டிருக்

கிறது. "ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்கு துக்கம்? யாருக்கு சண்டைகள்? யாருக்கு புலம்பல்? யாருக்கு காரணமில்லாமல் காயங்கள்? யாருக்கு இரத்தம் கலங்கின கண்கள்?

மதுபானம் இருக்கும் இடத்தில தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்கும் தானே. மதுபானம் இரத்த வர்ணமாயிருந்து பாத்திரத்தில் பளபளப்பாய் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப் போலக் கடிக்கும். விரியனைப் போல தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்!" மனிதனின் தலைக்கு கீழ் உள்ளபடம் அவனுடைய இருதயத்தின் நிலைமையை விளக்குகிறது.

Copyright ANGP

மனிதனுடைய இருதயம் பாவத்தின் இருப்பிடமாய் இருக்கிறபடியால், இதில் காணப்படும் பிராணிகள், அவன் இருதயத்தில் வாசமாய் இருக்கும், பற்பல பாவ சுபாவங்களை வெளிப்படுத்துகின்றது! தேவன் தம்முடைய தீர்க்கதரிசியாகிய எரேமியா மூலம் சொல்வதைக் கேளுங்கள். "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது, அதை அறியதக்கவன் யார்?" எரே. 17 : 9. எரேமியா சொல்வதை இயேசு இரட்சகர் உறுதிப்படுத்துவதையும் கேளுங்கள். "மனிதனுடைய இருதயத்

திற்குள் இருந்து பொல்லாத சிந்தனைகளும், விபச்சாரங்களும் வேசித்தனங்களும், கொலை பாதகங்களும், களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும் மதிகேடும் புறப்பட்டு வரும்.

பொல்லாங்கானவைகள் எல்லாம் உள்ளத்தில் இருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.” மாற். 7 : 21 – 23.

1. மயில் : இது அழகில் சிறந்த ஒரு பட்சியாக எல்லாராலும் கருதப்படுகிறது. ஆகையினால் படத்தில் மனிதனுடைய இருதயத்தில் காணப்படும் மயில், அவனுடைய பெருமையாகியப் பாவத்தைக் குறிக்கிறது. ஒளியின் தூதனும், அபிஷேகம் பண்ணப்பட்ட கேருபீனுமான லூசிப்பர், இந்தப் பெருமையினால் தான் கீழே தள்ளப்பட்டு, தேவனுடைய சத்துருவானான் - சாத்தான். (ஏசா. 14 : 9 – 17 ; எசேக். 28 : 12 – 17.)

பெருமை பிசாசினிடத்தில் இருந்து வருகிற ஒரு குணம், அது தன்னை அனேக விதங்களில் வெளிப்படுத்துகிறது. சிலர் செல்வத்தைக் குறித்தும், சிலர் கல்வியைக் குறித்தும், சிலர் அலங்காரமான உடையை அலங்கோலமான முறையில் அணிவதைக் குறித்தும், சிலர் பளப்பளப்பான ஆபரணங்களைக் குறித்தும், இன்னும் பலவிதமான காரியங்களைக் குறித்தும் பெருமை பாராட்டுகிறார்கள். (ஏசா. 3 : 17 - 24. பார்க்கவும்).

Copyright ANGP

சிலர் தங்கள் முன்னோர்களைக் குறித்தும், சிலர் தங்கள் தேசத்தைக் குறித்தும் சிலர் பண்பாட்டைக் குறித்தும், கலாசாரங்களைக் குறித்தும் பெருமை அடைகிறார்கள். "பெருமை உள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார். தாழ்மையுடைவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்." i பேது. 5 : 5. என்ற வசனத்தை மனுஷர் மறந்து பெருமை பாராட்டுகிறார்கள். பெருமையையும் அகந்தையையும் தேவன் வெறுக்கிறார். (நீதி. 8 : 13.) "அழிவுக்கு முன்னானது அகந்தை." நீதி. 16 : 18.

2. வெள்ளாடு: இது, மாம்ச இச்சையையும், துன்மார்க்கத்தையும், வேசித்தனத்தையும், விபச்சாரத்தையும் குறிக்கும். சற்றேறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, இயேசு கிறிஸ்து, சோதோம், கொமோராவின் காலத்தில் நடந்தது போல, கடைசிக் காலத்திலும், முன்னே சொல்லப்பட்டப் பாவங்கள் பெருகி வருகிறது என்பதை நாம் ஒத்துக்கொள்ள வேண்டும். தற்கால ஆவி, ஆண்களையும், பெண்களையும், பிடித்திருப்பதோடு, பக்தியுள்ளவர்கள் வீடுகளிலும், ஸ்தாபனங்களிலும், பள்ளிக்கூடங்களிலும், விடுதிகளிலும், ஊடுருவிப் பாய்ந்திருப்பதுமல்லாமல், கேடுண்டாக்கும் வித்துக்களை, வெட்கமின்றி மனிதர்களின் இருதயத்தில் விதைத்து, அதினாலே அவர்கள் சினிமா காட்சிகளுக்கும், நாடக மேடைகளுக்குச் செல்வதையும், தீமையைப் பயக்கும் நூல்களை படிப்பதையும், இன்னும் கடவுள் பாவமாக கருதும் காரியங்களை இவர்கள், தற்கால நாகரீகமாக எண்ணுகிறார்கள்!

Copyright ANGP

ஆயிரக்கணக்கான இளைஞர்கள், தாங்கள் படக்காட்சிகள் பார்ப்பதிலும், நாவல் புத்தகங்களை வாசிப்பதிலும், வெட்கத்தையும், துக்கத்தையுமே அடைகிறார்கள். துன்மார்க்கம் நிறைந்த சினிமா நடிகர்கள், தற்கால இளைஞர் மத்தியில் பெயர் பெற்றவர்களாய் விளங்குகிறார்கள்! நடனக் கூடங்கள், இப்படிப்பட்ட துன்மார்க்கர்களை விருத்திச் செய்யும் இடமாக காணப்படுகின்றது. ஆதி யாகமம் 39-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிற பரிசுத்தத்தைக் காத்துக்கொண்ட கடவுளின் தாசனாகிய யோசேப்பு முதலியவர்களை, தற்கால இளைஞர்கள், தங்களுக்கு முன் மாதிரியாக வைத்துக் கொள்வதில்லை! அநாகரீகமான, கிராம, புற ஜாதித் தலைவன், விபச்சாரத்தில் கண்டு பிடிக்கப்பட்ட ஒரு ஆணையும், பெண்ணையும் மரண தண்டனைக்குள்ளாக்க அறிந்திருப்பானானால், நாகரீகமென்று சொல்லிக்கொண்டு பாவம் செய்கின்ற மக்களுக்கு விரோதமாக, நியாயத் தீர்ப்பின் நாளில், அவன் எழும்பிக் குற்றம் சாட்டுவான். நாம் பாவத்தோடு விளையாடாதபடிக்கு பாவத்தை விட்டு ஓடும்படி தேவன் கட்டளையிடுகிறார். "எந்த பாவமும் சரீரத்திற்கு புறம்பானது, வேசித்தனமோ, சரீரத்திற்கு விரோதமாய் செய்யப்படும் பாவம். நீங்கள் தேவனுடைய ஆலயமாய் இருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்றும் அறியாதிருக்கிறீர்களா?

தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாய் இருக்கிறது. நீங்களே அந்த ஆலயம். நீங்கள் உங்க

ளுடையவர்கள் அல்ல. தேவனுக்குச் சொந்தமான வர்கள் !" i கொ. 6 : 18,19. "தேவனுடைய ஆலய மாகிய சரீரத்தை ஒருவன் கெடுத்தால், தேவன் அவனைக் கெடுப்பார். தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது !" i கொ. 3 : 17.

3. பன்றி : குடியாகியப் பாவத்தையும், பெருந் தீனியாகியப் பாவத்தையும், இது காட்டுகிறது ! பன்றி ஒரு அருவருப்பான பிராணி. சுத்தமானதும், அசுத்தமானதுமான எல்லாவற்றையும், அது போகும் வழியிலே தின்னும் ! அது போல, பாவ முள்ள இருதயம் அசுத்தமான எல்லாவித எண்ணங் களையும், கருத்துக்களையும், அசுத்தப்படங்களையும், அசுத்தமான புத்தகங்களையும் ஏற்றுக்கொள்கிறது ! சரீரம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறபடியால், அசுத்தமான உணவு, கெட்டபழக்க வழக்கங் களான, புகைபிடித்தல், வெற்றிலைபாக்குப் போடுதல், புகையிலை உபயோகித்தல், லாகிரி வஸ்த்துக்களை உபயோகித்தல், தீமை விளைவிக்கும் மருந்துகளை உபயோகித்தல், மாத்திரைகளை உபயோகித்தல், இவைகளினால் தீட்டுப்படுகிறது! புகைபிடித்தலும், லாகிரி வஸ்த்துகளை உபயோகித் தலும், ஆண்களையும், பெண்களையும், முன்பு ஒரு போதும் இல்லாததைவிட, தற்போது, அடிமை படுத்தியிருக்கிறது! தேவனுடைய வல்லமை மாத்திரம்தான், பிசாசின் அடிமைத்தனத்தில் இருந்தும், மேற்கூறிய கொட்டபழக்கவழக்கங்களில் இருந்தும் மனிதனை விடுதலையாக்கமுடியும்! பக்தி உள்ளவர்கள், ஆலயத்திற்குள் புகைபிடிக்காமல்

Copyright ANGP

இருப்பது, பரிசுத்தமென்று நினைக்கிறார்கள். ஆனால், தங்கள் சரீரமாகிய தேவனுடைய ஆலயத்தை இப்படிப்பட்ட, தீமை விளைவிக்கும் பொருட்களினால் தீட்டுப்படுத்துவதை தீமை அல்லது பாவம் என்று நினைக்கிறதேயில்லை! "நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்கள் என்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாய் இருக்கிறார் என்றும் நீங்கள் அறியாதிருக்கிறீர்களா? ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்; தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது; நீங்களே அந்த ஆலயம்." i கொ. 3 : 16, 17.

பெருந்தீனிக்காரன், கடவுளின் பார்வையில், மிகவும் அருவருப்பானவன். நாம் வாழ்வதற்காக உண்கின்றோம், ஆனால். உண்பதற்காக வாழ்வது இல்லை! பசி, புசிப்பதின் மூலம் திருப்தியை அளிக்கும் ஆனால் மாம்ச இச்சையோ, திருப்தியைக் கொடுக்காமல், மேலும் மேலும், தா, தா, என்று கேட்கும்! மாம்சஇச்சை ஒருபோதும் திருப்தியடையாது! பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணத்தின்படி பெருந்தீனிக்காரனும், குடிகாரனும், கல்லெறியப்படவேண்டும்! (உபா. 21 : 18—21). "குடியனும், போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்; தூக்கம் கந்தைகளை உடுத்துவிக்கும்." "போஜனப்பிரியனுக்கு தோழனாய் இருக்கிறவனோ தன் தகப்பனை அவமானப்படுத்துகிறான்" நீதி. 23 : 21. 28 : 7. போஜனப்பிரியனும், மாம்சஇச்சைகளுக்கு அடிமைப்பட்டவனுமாயிருந்த ஒரு ஐசுவரிய

Copyright ANCP

வான், மரித்தபோது பாதாளத்தில் தன் வேதனை களின் மத்தியில், தன் கண்களை ஏறெடுத்து சொல்லிமுடியாத வேதனை அடைந்ததை நினைத்துக் கொள்ளுங்கள். லூக். 16 : 19—26. குடிப்பழக்கத்தின் தீமைகளை குறித்து யாவரும் நன்ருய் அறிந்திருக்கிறப்படியால், அவைகளை விரிவாய் இங்கு சொல்ல அவசியமில்லை. ஆயினும், அதை இலேசாக நினைத்துவிடக்கூடாது! குடிகாரன் எவனும், தேவனுடைய இராஜ்ஜியத்தை சுதந்தரிக்கமாட்டான் என்று, தேவனுடைய வசனம் சொல்லுகிறது.

மதுபானம், ஒரு ஆகாரம் அல்ல, ஆனல் அதை உபயோகிப்பவர்கள், மூடத்தனமாக நடந்துக் கொள்ளும் விதத்தில், அவர்கள் மனதைக்கெடுத்து குழப்பி உயிருக்கு இடையூறு விளைவிக்கும் விதத்தில் கெடுக்கும், ஒரு லாகிரி வஸ்து ! அவர்கள், ஒழுக்க மற்றவர்களும், கொலைப்பாதகருமாய் தீருவதற்கு குடியேக்காரணம்! குடிக்காவிட்டால், மேற்கூறிய தீமைகளுக்கு ஆளாகமாட்டார்கள். " திராட்சரசம், பரியாசஞ் செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினல் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல." நீதி. 20 : 1. லாகிரி வஸ்துக்களை, உண்டு பண்ணுகிறவனும் அதை விற்கிறவனும், தேவன் முன்னிலையில் குடிகாரர்களை விட பெரும் குற்ற வாளியாகக் காணப்படுகிருன். " சாராயத்தைக் குடிக்க வீரரும், மதுவைக்கலந்து வைக்க பராக்கிரம சாலிகளுமாய் இருக்கிறவர்களுக்கு ஐயோ !" ஏசா. 5 : 22.) " தன் தோழருக்குக் குடிக்கக்

Copyright ANGP

கொடுத்துத் தன் துருத்தியை அவர்கள் அண்டையிலே வைத்து, அவர்களுடைய நிர்வாணங்களைப் பார்க்கும்படிக்கு அவர்களை வெறிக்கப் பண்ணுகிறவனுக்கு ஐயோ!" ஆபகூக். 2 : 15. "அவர்கள் சுரமண்டலத்தையும், தம்புருவையும், மேளத்தையும், நாதசுரத்தையும், மதுபானத்தையும் வைத்து விருந்துக் கொண்டாடுகிறார்கள். ஆனாலும் கர்த்தரின் கிரியையை நோக்குகிறதுமில்லை, அவர் கரத்தின் செய்கையைச் சிந்திக்கிறதுமில்லை." ஏசா. 5 : 12.

"அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை என்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரக ஆராதனைக்காரரும், விபச்சாரக்காரரும், சுய புணர்ச்சிக்காரரும், ஆண் புணர்ச்சிக்காரரும் திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதரசினரும், கொள்ளைக்காரரும், தேவனுடைய ராஜ்ஜியத்தை சுதந்தரிப்பதில்லை." i கொ. 6:9,10. நம்முடைய இயற்கை சுபாவத்தின் மூலம் தோன்றுகின்றப் பாவங்கள் எவ்வளவு உண்மையாக இருக்கிறது! அவைகளில் சிலவற்றை கவனியுங்கள். "விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்ரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கப்பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள், முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தை

Copyright ANGP

சுதந்தரிப்பதில்லை.” கலா. 5 : 19–21. “துன் மார்க்கத்திற்கேதுவான மதுபான வெறிகொள்ள வேண்டாம்.” எபே. 5 : 18. தாகமாயிருப்பவர் களுக்கு இயேசுகிறிஸ்து ஒரு அழைப்பைக் கொடுக்கிறார்! “ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து ஜீவத்தண்ணீரை இலவச மாகப் பானம் பண்ணக்கடவன்” என்றார். (யோவா. 7 : 37, 38). “ஓ! தாகமாயிருக்கிறவர்களே, நீங்கள் எல்லோரும் தண்ணீர்களண்டைக்கு வாருங்கள்; பணமில்லாதவர்களே, நீங்கள் வந்து, வாங்கி சாப்பிடுங்கள் ; நீங்கள் வந்து, பணமுமின்றி, விலையுமின்றித் திராட்சரசமும் பாலும் கொள்ளுங் கள்.” ஏசா. 55 : 1. “நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலும் தாகமுண்டாகாது; நான் அவனுக்குக் கொடுக்கும் தண்ணீர் அவனுக் குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாய் இருக்கும் என்றார்.” யோவா. 4 : 14.

Copyright ANCP

4. ஆமை : இது சோம்பலையும், காலக்கடத் தலையும், மந்திரத்தையும், மயக்கத்தையும் காட்டு கிறது! அவிசுவாசம் பில்லி சூனியப்பாவத்திற்கு ஒப்பாயிருக்கிறது. “சோம்பேறியின் கைகள் வேலை செய்ய சம்மதியாததனால், அவன் ஆசை அவனைக் கொல்லும். அவன் நாள்தோறும் ஆவலுடன் இச்சிக்கிறான்; நீதிமானோ பிசினித்தனமில்லாமல் கொடுப்பான்.” நீதி. 21:25, 26. யோசுவா இஸ்ரவேல் ஜனங்களை நோக்கி, “நீங்கள் தேசத்தைச் சுதந்தரித்துக்கொள்ள அசதியாயிராதேயுங்கள்” என்றான். மனிதனுடைய இயற்கை சுபாவம், தேவ

னுடைய நன்மைகளைப் பெற்றுக்கொள்ள, சோம்ப லும் அசதியுமுள்ளதாய் இருக்கிறது! "இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கப் பிரயாசப் படுங்கள்" லூக். 13 : 24. "பரலோக ராஜ்யம் பல வந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிற வர்கள் அதைப் பிடித்துக்கொள்கிறார்கள்." மத். 11 : 12. நம்முடைய இரட்சிப்பைக் குறித்தும், ஆவிக் குரிய நலனைக் குறித்தும், ஏனோதானோ என்றிருப் பது, நம்மை அழிவுக்கு நேரே நடத்திவிடும். ஜெபிப் பதினின்றும், தேவனுடைய ஆழமான சத்தியங் களைத் தேடுவதினின்றும், தேவனுடைய விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களை அடைவதினின்றும், நம்மைத் தடுத்து அழிவுக்கு நேரே நடத்துகிறது.

தேவன் இன்று உன்னோடு பேசி, இன்றைக்கே உன் இருதயத்தை அவருக்குக் கொடுக்கும்படி துரிதப்படுத்தும் போது, சாத்தான் நாளைக்கு அல்லது பின்னால் பார்க்கலாம் என்று ஏமாற்றி, நீ இரட்சிப்பை அடைந்துக் கொள்ளாமலும், இயேசுவை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாமலும், நீ கிறிஸ்து அற்றவனாக மரணமடையச் செய்துவிடு கிறான். "பரிசுத்தாவியானவர் சொல்கிறபடியே: இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் வானந்தரத்திலே கோபம் மூட்டின போதும், சோதனை நாளிலும் நடந்ததுபோல, உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள்." எபி. 3 : 7, 8. என்று தேவன் சொல்கிறார். எத்தனையோ பேர், இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாமல், பிறகு பார்ப்போம் என்று தள்ளி வைப்பதால், அதை ஒரு

Copyright ANGP

போதும் பெற்றுக்கொள்ளாமல் அழிந்து போகிறார்
கள். நாளை உன்னுடைய நாள் அல்ல! ஆமை
ஓட்டை மந்திரவாதிகள், பில்லி சூனியம் செய்யப்
பயன்படுத்துகிறார்கள். இது, ஜீவனுள்ள தேவன்
மேல் நம்பிக்கை வைக்காமல், பில்லி சூனியம், குறி
சொல்லுதல், முதலியப் பாவங்களை செய்ய நடத்து
கிறது. முக்கியமாக, துன்பத்திலும், வியாதியிலும்,
துக்கத்திலும், மேற்கூறிய பிசாசின் கிரியைகளை
நம்பாமல் நமக்கு உதவி செய்ய ஆயத்தமாயிருக்கிற
ஜீவனுள்ள தேவனை நோக்கி கூப்பிடும்படிக்கு
வேதம் நமக்கு போதிக்கிறது. "நல்ல மனிதனுடைய
நடைகள் கர்த்தரால் உறுதிப்படும். அவனுடைய
வழியின் மேல் அவர் பிரியமாய் இருக்கிறார்."
சங். 37 : 23.

"உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன்
சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள்
கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்
பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்
பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை
இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன்
பாவஞ் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்
படும். நீங்கள் சொஸ்தமடையும் படிக்கு, உங்கள்
குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு,
ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள். நீதி
மான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்
பெலனுள்ளதாயிருக்கிறது." யாக். 5 : 14-16. "கிழக்
கிலும் மேற்கிலும் வனாந்திர திசையிலுமிருந்து
ஜெயம் வராது. தேவனே நியாயாதிபதி." சங்.

Copyright ANGP

75 : 6 7. தேவன் இஸ்ரவேல் ஜனங்களுடன் பேசி கட்டளையிட்டதாவது, "தன் மகனையாவது, தன் மகளையாவது தீக்கடக்கப் பண்ணுகிறவனும். குறிச் சொல்லுகிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்சனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும், மந்திரவாதியும், சன்னதக்காரனும், மாயவித்தைக்காரனும், செத்தவர்களிடத்தில் குறி கேட்கிறவனும் உங்களுக்குள்ளே இருக்கவேண்டாம். இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்." உபா. 18 : 10–12. "நாய்களும், சூனியக்காரரும், விபச்சாரக்காரரும், கொலைபாதகரும், விக்ரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதன்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்." வெளி. 22 : 15.

"அஞ்சனம் பார்க்கிறவர்களை நாடி, குறி சொல்கிறவர்களைத் தேடாதிருங்கள்; அவர்களாலே தீட்டுப்படவேண்டாம்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்." லேவி. 19 : 31. "அவர்கள் உங்களை நோக்கி: அஞ்சனம் பார்க்கிறவர்களிடத்திலும், முணுமுணென்று ஓதுகிற குறிகாரரிடத்திலும் விசாரியுங்கள் என்று சொல்லும்போது, ஜனங்கள் தன் தேவனிடத்தில் விசாரிக்க வேண்டியது அல்லவோ? உயிர் உள்ளவர்களுக்காக செத்தவர்களிடத்தில் விசாரிக்கலாமோ? வேதத்தையும் சாட்சியாகமத்தையும் கவனிக்கவேண்டும்; இந்த வார்த்தையின்படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சம் இல்லை." ஏசா. 8 : 19, 20. நீ இந்தப் புத்தகத்தைப் படிக்கும்போது

Copyright ANCP

தேவன் உன்னோடு பேசுகிறார்! நீ முழுவதும் மனந்திரும்பி தேவனுக்கு உன்னை ஒப்புக்கொடுக்கும்படி உன்னை அழைக்கிறார். ஆனால் உனக்குள்ளிருக்கும் ஆமையின் ஆவி, உன் இருதயத்தை பயத்தினால் நிரப்பி பலவிதமான எண்ணங்களையும், சிந்தனைகளையும் உன் இருதயத்திற்குள் கொண்டுவந்து, நீ மனந்திரும்பாதபடிக்குக் காலத்தைக் கடத்தும்படி செய்கிறது. கிறிஸ்து இயேசுவில் உள்ள அளவிட முடியாத ஐசுவரியத்தையும், அவருடைய அதிசயமான சமாதானத்தையும், சொல்லி முடியாத சந்தோஷத்தையும், மகிமையையும், மகிழ்ச்சி நிறைந்த நித்திய வாழ்வையும், சிந்திப்பதற்கு பதிலாக நடனங்கள், விருந்துகள், உலக உல்லாசங்கள், இவைகளை விட்டுவிடவேண்டுமே என்றும், என் ஜனங்கள், சிநேகிதர், உலகத்தார், என்ன நினைப்பார்களோ என்றும் பயப்படுகிறாய்!

மனித பயமும், மரண பயமும் உன்னை பிசாசினுடைய அடிமைத்தனத்தில் வைத்திருப்பதை நீ உணராமல், கிறிஸ்துவை என் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும்போது, மேற்கூறியபடி பல, உலக சந்தோஷங்களையும் விட்டுவிட நேரிடுமேயென்று திகைக்கிறாய்! ஜீவகாலமெல்லாம் மரண பயத்திற்கு அடிமைகளாக இருந்தவர்களை எல்லாம் விடுதலையாக்க இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தார். (எபி. 2 : 14, 15.) காலத்தைக் கடத்துகிற ஆவி, ஆமையின் ஓட்டைப் போல, உன் உள்ளத்தை எவ்வளவு கடினப்படுத்தக்கூடுமோ அவ்வளவுக்கதிகம் கடினப்படுத்தி இருக்கிறது!

Copyright ANGP

5. சிறுத்தைப் புலி: இது ஒரு மூர்க்கமான, கொடிய மிருகம். கோபம், பகை, மூர்க்கம், மனிதனுடைய இருதயத்தை ஆட்சி செய்து, பல சமயங்களில் கொலைக்கு நேரே அவனை வழி நடத்திவிடுகிறது! கோபத்தை நீ, அடக்க முயன்று, சில வேளைகளில் அடக்கி வைத்த போதிலும், அது திடீரென்று, முழு உக்கிரத்தோடு உன்னை மேற்கொள்ளுகிறது! கோபம் உன் உள்ளத்தில் நிறைந்திருக்கிறதென்று ஒத்துக்கொண்டு, இயேசு கிறிஸ்து, உன்னை விடுதலையாக்கும்படி கேட்பது நலம். உங்கள் கண்களில் கோபக்குறி காணப்பட வேண்டாம். "கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு; பொல்லாப்புச் செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம்." சங். 37:8. "உக்கிரம் கொடுமையுள்ளது, கோபம் நிஷ்டூரமுள்ளது; பொறாமையோ வென்றால், அதற்குமுன் நிற்கத் தக்கவன் யார்?" நீதி. 27:4. "உன் மனதில். சீக்கிரமாய் கோபம் கொள்ளாதே; மூடரின் நெஞ்சிலே கோபம் குடிகொள்ளும்" பிரச. 7:9. ஆகையால் சகலவிதமான கோபங்களையும் விட்டுவிடு: (கொலோ. 3:8) அநேக கோழைகளான மனிதர்கள் தீமையான காரியங்களைச் செய்ய, அல்லது பழிக்குப் பழி வாங்க, தங்களை தைரியப்படுத்திக் கொள்ள மதுவைக் குடிக்கிறார்கள்! ஆனால், "அவர்களுடைய திராட்சரசம் வலுசர்ப்பங்களின் விஷமும் விரியன் பாம்புகளின் கொடிய விஷமுமானது." உபா. 32.33.

பழிவாங்குதல் மனித உள்ளத்திற்கு இன்பமாயிருக்கும்! ஆனால் தேவனே நமக்காக பழிக்குப்

Copyright ANGP

பழிவாங்குகிறவர். "உன்னைப்போல் உன் பிறனையும் நேசி." "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்." என்று இயேசு சொல்லுகிறார்! நமக்கு விரோதமாய் குற்றம் செய்கிறவர்களுக்கு நாம் மன்னிக்கும்போது, தேவன் நமது பாவங்களை மன்னிப்பதாக வாக்களித்திருக்கிறார்! முகம் சுளித்து முறுமுறுக்கிற ஆவி, தேவனுடைய பார்வையில் அருவருப்பாய் இருக்கிறது. இரத்தம் சிந்துவதற்கேதுவான, இச்சையும் யுத்தப் பிரியமும் மனித உள்ளத்தில் குடிகொண்டு இருக்கிறது! ஆகையால், உண்மையானதும் நீடிக்கிறதுமான சமாதானம் மனிதனுடைய உள்ளத்தில் ஸ்தாபிக்கப்படவேண்டும்.

6. சர்ப்பம்: பாம்பு, ஏதேன் தோட்டத்தில் ஏவாளை வஞ்சித்து, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே இருந்த, இனிமையான ஐக்கியத்தையும், உறவையும், அழித்துப்போட்டது! ஆதாமும், ஏவாளும் சர்வபூமியையும், ஆட்சிசெய்து, தேவனோடு பூரண ஐக்கியம் கொண்டு, லூசிபர் ஆதியில் இருந்த ஸ்தானத்தில் இருப்பதைப் பார்த்து பொறாமைக் கொண்டான்! பிசாசு பொறாமைக் கொண்டு, அவர்களை அழிக்கத் திட்டம் இட்டு, அவர்களுக்கும் தேவனுக்கும் இடையே இருந்த, அதிசயமான, ஐக்கியத்தையும் சகவாசத்தையும், கெடுப்பதில் ஜெயம் பெற்றான்! சாத்தானிலிருந்த அதே பொறாமை மனிதனுடைய உள்ளத்தில் வருமானால், மற்றவர்களுடைய சந்தோஷ சுக வாழ்வை, காணும்போது அவனுடைய உள்ளத்தில் உள்ள சந்தோஷம் அழிந்து போகிறது.

Copyright ANGP

"வைராக்கியம் பாதாளத்தைப் போல் கொடிதாய் இருக்கிறது." உன். 8:6. இந்தப் பொருமை மனிதனுடைய இருதயத்திற்குள் வரும்போது, அவனுக்குள் துர்ச்சிந்தையை உண்டாக்கி, அவனைக் கொலை பாதகத்துக்கும் வழிநடத்தி விடுகிறது. இப்படித் தான் சிலருடையக் குடும்ப வாழ்க்கையிலும் நடந்து போகிறது! வியாபாரத்திலும், வாழ்க்கையின் மற்ற எல்லா துறைகளிலும், சொல்லிமுடியாதத் துயரத்திற்கும், வெறுப்பிற்கும் காரணமாகிறது.

தேவனுடைய ஊழியர்கள், பிரசங்கிமார், இவர்களும் தங்களைக் காட்டிலும் மற்றவர்களை, தேவன் அதிகமாகப் பிரயோஜனப்படுவதை காணும்போது பொருமைக் கொள்கிருர்கள்! இவர்களும் இத் தீமைக்கு விலகினவர்கள் அல்ல! பிசாசின் பொருமையின் ஆவியினுல், அவர்களுடைய ஊழியத்தின் பிரயோஜனம் பங்கம் அடையாமல் இருக்க வேண்டுமானுல் எப்பொழுதும் விழிப்புள்ளவர்களாக இருந்து, பரிசுத்த ஆவியினுல், நமது உள்ளத்தில் ஊற்றப்படும் சுத்த தேவன்பினுல் நிறையப்பட்டவர்களாக இருக்கவேண்டும்.

7. தவளை: மண்ணை, சாப்பிடும் இத் தவளை எல்லாத் தீமைக்கும் காரணமாக இருக்கிற, பண ஆசையையும், பேராசையையும், குறிக்கிறது, (i தீமோ. 6:10.) காங்கோ பிரதேசத்தில் உள்ள சில தவளைகள், நூற்றுக்கணக்கான எறும்புகளைத் தின்றுவிட்டு வயிறு வெடித்துச் செத்துப்போகிறது! பேராசை உள்ள ஒருவன், ஏழைக்கோ, தேவை உள்ளவர்களுக்கோ கொடுக்கத் தன் கையைத்

Copyright AIGP

திறக்க விரும்பமாட்டான்! ஆனால் பூச்சியும், துருவும் கெடுக்கிற உலக ஆஸ்தியைச் சேர்ப்பதற்கு, எல்லா வழிகளிலும் பிரயாசைப்படுகிறான்! "பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம்; இங்கே பூச்சியும், துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதுமில்லை; அங்கே திருடர் கன்னமிட்டு திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." மத். 6:19-22 என்று இயேசு சொல்லுகிறார். வெள்ளியையும், பொன்னையும், விலையேறப்பெற்ற கற்களையும், வஸ்திரங்களையும் இச்சித்தப்படியினால் ஆகானும் அவன் வீட்டாரும் அழிந்துபோனார்கள். (யோசுவா 7ம் அதிகாரம்). இயேசு கிறிஸ்துவின் சீஷனாகிய யூதாஸ்காரியோத்தும் இந்தப் பண ஆசையினால் தான் தனது ஆண்டவரும், கர்த்தருமாகிய இயேசுவைக் காட்டிக்கொடுத்து நாண்டுக்கொண்டு செத்தான். பணமும் பொன்னும் தீமையல்ல, ஆனால் அதைப்பற்றி மனித உள்ளத்தில் ஏற்படும் இச்சையே பாவம்.

பல வகுப்புகளிலும், ஜாதிகளிலும் உட்பட்ட ஆயிரக்கணக்கான ஆண்களும், பெண்களும் சூதாட்டம், குதிரை, நாய், பந்தயங்கள் முதலியவை களின் மூலமாக, துரிதமாக பெரும் பணம் சம்பா தித்துக்கொள்ளவேண்டும் என்ற துர் இச்சையினால்

தங்களையும் தங்கள் குடும்பங்களையும் பாழ்படுத்திக் கொள்கிறார்கள். பிரயாசம் இல்லாமல், பணக்கார ராக விரும்புகிறவர்கள் பல சமயங்களில் திருடுவ தற்கும் கொலைக்கும் நடத்தப்படுகிறார்கள். பண ஆசைக்கும், பேராசைக்கும், புகழ் ஆசை, அதிகாரப் பிரியம் போன்றத் தோழர்கள் உண்டு! அது ஒருவேளை, மற்றவர்களை ஆளுகைச் செய்யும் அரசியல் அதிகாரமோ அல்லது ஏழைகளை ஒடுக்கும் செல்வச் செருக்காகவோ அல்லது கடவுள்மேல் வைராக்கியம் காட்டுவதை விட்டு, ஒரு குறிப்பிட்ட சபையின்மேல் வைராக்கியம் வைத்து, அந்தச் சபையைச் சேராமல், கிறிஸ்துவை பின்பற்றுகிற பரிசுத்தவான்களைப் புறக்கணிக்கும் மதவெறி யாகவோ இருக்கலாம்! (மாற். 9:38).

"பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையா யிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திர ளான ஆஸ்தி யிருந்தாலும் அது அவனுக்கு ஜீவ னல்ல." என்று இயேசு சொன்னார் லூக். 12 : 15 "ஐசுவரியமுள்ள ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன்: நான் என்ன செய்வேன்? என் தானியங்களைச் சேர்த்து வைக் கிறதற்கு இடம் இல்லையே; நான் ஒன்று செய் வேன், என் களஞ்சியங்களை இடித்து, பெரிதாகக் கட்டி எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து, பின்பு: ஆத்துமாவே, உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக் கிறது; நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பா

யிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துச் சொல்லிக் கொண்டான். தேவனோ அவனை நோக்கி: மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும் என்றார்' தேவனிடத்தில் ஐசுவரியவானாயிராமல், தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிறவன் இப்படியே இருக்கிறான் என்றார்." லூக் 12 : 16 - 21. "மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?" மாற். 8 : 36. "என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும் என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்திற்காகவும், கவலைப்படாதிருங்கள்....தேவனுடைய ராஜ்யத்தையே தேடுங்கள், அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும்...... உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்." லூக். 12 : 22 - 34

Copyright ANGP

8. சாத்தான்: பொய்யனும், பொய்க்கும், பொய்யை உண்டாக்குகிறவர்களுக்கும் பிதாவாகிய பிசாசு, இருதயத்தை ஆளுகை செய்கிறவனும், பல பாவங்களை தூண்டி விடுகிறவனுமாயிருக்கிறான். "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள். உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதி முதல் கொண்டு மனுஷ கொலை பாதகனாய் இருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடி

யால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப் பிதாவுமாய் இருக்கிறபடியால், அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்து பேசுகிறான்." யோவா. 8 : 44 சிறிய பொய், பெரிய பொய்யைப் போலவே தீயது! பொய்யைப் பேசலாம், எழுதலாம், அல்லது நடிக்கலாம்! மாய்மாலக்காரனும் பொய்யன் தான், ஏனென்றால் அவன் இல்லாத ஒன்றை இருப்பது போல நடிக்கிறான்! கடவுள் பொய் சொல்ல முடியாது! அது போலவே ஒரு கிறிஸ்தவனும் பொய் சொல்ல முடியாது (தீத்து. 1 : 3) "நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்கள் என்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாய் இருப்போம்." i யோ. 1 : 6. "நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும், விக்கிரக ஆராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதன்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள்." வெளி. 22 : 15. "அபத்தம் பேசும் பொய் சாட்சியையும், பொய்யனையும் தேவன் வெறுக்கிறார்." (நீதி. 6 : 19.)

9. நட்சத்திரம்: இது மனிதனுடைய இருதயத்தின் மனசாட்சிக்கு அடையாளமாயிருக்கிறது. இங்கே, அது தீயதாகவும், தீட்டுபட்டதாகவும், தொடர்ந்து மனப்பூர்வமாக பாவஞ்செய்கிறதினால், உயிர் அற்றதாகவும் காணப்படுகிறது. குருடாக்கப்பட்டதும் வேண்டுமென்றே தவறான வழியில் செல்வதுமான, இந்த மனச்சாட்சி தன்னுடைய செய்கை

களைக் குறித்து, நிதானிக்க இயலாததாக இருக்கிறது! இப்படிப்பட்ட துர்மனச்சாட்சி, சில வேளைகளில் அமைதலாகவோ அல்லது குழப்பமானதாகவோ இருக்கலாம்! துர்மனச்சாட்சி, மன்னிக்க வேண்டிய இடத்தில் குற்றஞ்சாற்றி, குற்றம் சாற்றப்பட வேண்டிய பாவங்களை மன்னிக்கிறது. விசுவாசத்தைவிட்டு வழுகிப்போவதினாலும், வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், துர் உபதேசத்திற்கும் செவி கொடுக்கிறதினாலும், பகுத்தறிவையும், உணர்ச்சியையும் இழந்து, மனச்சாட்சியில் சூடுண்டு மழுங்கி போன நிலையில் இருக்கிறது! i தீமோ. 4 : 1. எபி. 10 : 22.

10. கண் : கர்த்தருடைய கண்கள், இருதயத்திலுள்ள எல்லாவற்றையும் காண்கின்றன! அவருடைய அக்கினி மயமான கண்களுக்கு மறைவானவைகள் ஒன்றுமில்லை ஆகையால் நம்முடைய இருதயத்தின் அந்தரங்கங்களையும், நோக்கங்களையும் அறிகிறார்! உன்னுடைய தீய செயல்கள் கார் இருளிலோ அடர்ந்த காட்டிலோ, படுகுழியிலோ அல்லது வேறு எங்கேயோ செய்யப்பட்டாலும், கர்த்தருடைய கண்கள் அவைகளைக் காண்கின்றன! (இந்தப் படங்களில், கண், மனிதனுடைய முகத்தோற்ற வேறுபாடுகளையும் குறிக்கிறது).

11. இருதயத்தைச் சுற்றிலும் இருக்கும் அக்கினி நாவுகள் : இவைகள் பாவமுள்ள மனிதனுடைய இருதயத்தைச் சுற்றிலும் இருக்கும். தேவனுடைய அன்பிற்கு அடையாளமாக இருக்கிறது!

Copyright ANGP

தேவன் பாவத்தை வெறுக்கிறார் என்றாலும், பாவியினுடைய மரணத்தை விரும்பாமல், அவனை நேசித்து, அவன் பாவத்தை விட்டு, தப்பிப் பிழைப்பதையே விரும்புகிறார்! இயேசு கிறிஸ்து பாவிகளை ரட்சிக்க வந்தார். மனந்திரும்புகிற ஒரே பாவியின் நிமித்தம் பரலோகத்தில் மிகுந்த சந்தோஷம் உண்டாயிருக்கிறது! இச்சிறு அக்கினி நாவுகள், உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டியின் திரு ரத்தத்தையும் குறிக்கிறது!

12. தேவ தூதன்: இத்தூதன் கர்த்தருடைய வேத வாக்கியங்களுக்கு அடையாளமாக நிற்கிறான். தேவன், ஏமாற்றமடைந்து, பாவ பாரம் சுமக்கிற ஒவ்வொரு ஆணோடும், பெண்ணோடும், பேசி அவர்கள் மனந்திருந்தி தேவனுடைய அன்பையும், வெளிச்சத்தையும், பெற்றுக்கொள்ளும்படி விரும்புகிறார்!

Copyright ANCP

13. புறா: இந்த புறா பரிசுத்த ஆவிக்கு அடையாளமாயிருக்கிறது! அந்த சத்திய ஆவி, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக் குறித்தும் கண்டித்து உணர்த்துகிறது! இப்படத்தில், பரிசுத்த ஆவியானவர் மனிதனுடைய இருதயத்திற்குப் புறம்பே நிற்கிறார். பாவம் ஆளுகிற இடத்தில் பரிசுத்த ஆவியானவர் வசிக்க முடியாது.

இந்த இருதயப்படம், உன் யதார்த்த நிலைமையைக் காட்டுமானால், தேவனை நோக்கிக் கூப்பிடு.

உன் உள்ளத்தை அவருக்குத் திறந்துகொடு. அவருடைய ஜீவ வார்த்தையின் ஒளி, உன்னுடைய உள்ளத்தில் பிரகாசிக்கட்டும்! "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீ ரட்சிக்கப்படுவாய்". ஆம், தேவன் விருப்பமுள்ளவராக இருக்கிறார்! உன் இருதயத்தை மாற்றவும், உனக்கு ஒரு புதிய இருதயத்தையும், புதிய ஆவியையும், கொடுக்க வாக்குப்பண்ணி இருக்கிறார்! இக்காரியங்கள் இரண்டாவது படத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன.

## 2. இரண்டாவது படம்

Copyright ANCP

அடுத்த பக்கம் காணப்படும் படம், மனம் திரும்பி, தேவனைத்தேட ஆரம்பிக்கும் இருதயத்தைக் காட்டுகிறது.

தேவதூதன் பிடித்திருக்கும் பட்டயம் கர்த்தருடைய வசனத்தைக்காட்டுகிறது. "தேவனுடைய வார்த்தையானது ஜீவனும், வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும், ஊனையும், பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது." எபி. 4 : 12. பாவத்தின் சம்பளம் மரணமென்றும், "அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது." எபி. 9 : 27. என்றும் கர்த்தருடைய வசனம் நமக்கு ஞாபகப்படுத்துகிறது!

அக்கினியும், கந்தகமும், எரிகிற கடலே பாவிக்கும் அவிசுவாசிக்கும் பங்காயிருக்கிறது. மறுகையில்




2. உணர்த்தப்பட்டு ஒப்புக்கொடுக்கும் இருதயம்

தேவதூதன் ஒரு மண்டை ஓட்டைப்பிடித்திருக்கிறன் அல்லவா! இது, எல்லாமனிதரும் மரணம்

அடையவேண்டும் என்பதை ஒரு பாவிக்கு ஞாபகப் படுத்துகிறது. நம்முடைய மாமிசத்தையும், அதன் ஆசை இச்சைகளேயும் நிறைவேற்றுவதற்காக, நாம் அதிகமாக நேசித்து, உடுத்துவித்து, போஷித்து, அழகுப்படுத்தி, எல்லா கவனமும் கவலேயும் செலுத்துகிற நமது சரீரம், ஒரு நாளேக்கு மரித்து அழிந்து, புழுக்கள் தின்னுவதற்குமே வைக்கப்பட்டிருக்கிறது! ஆனல் நமது ஆவி, ஆத்துமாவோ என்றைக்கும் ஜீவிக்கிறதாகவும், தேவனுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்க வேண்டியதுமாயிருக்கிறது! இங்கே பாவி, தேவனுடைய செய்திக்குச் செவிகொடுத்து, தேவனுடைய அன்பிற்கு தன் இருதயத்தைத் திறந்து கொடுக்கிறதைக் காட்டுகிறது! பரிசுத்த ஆவியானவர், அவனுடைய இருண்ட பாவமுள்ள இருதயத்தில் பிரகாசிக்கிருர்! தேவனுடைய ஒளியானது, மனிதனுடைய இருதயமாகிய ஆலயத்தில் உள்ள எல்லா இருளேயும், அகற்ற உட் பிரவேசிக்கிறது.

தேவனுடைய ஒளி உள்ளே வரும்போது, இருள் அகல வேண்டியதே! பலவிதமான மிருகங் களினுல், உருவகப்படுத்தப்படும் பாவங்கள், மனித இருதயத்திலிருந்து வெளியே ஓடவேண்டும்! ஆகை யால் இதை வாசிக்கும் நண்பரே! உலகத்தின் ஒளியா கிய இயேசுகிறிஸ்து, உமது இருதயத்தில், உள்ளே செல்ல இடம் கொடும்! படத்தில் காண்பிக்கப்பட்ட பிரகாரம், இருளும், இருளின் கிரியைகளும், இருதயத்தில் இருந்து வெளியேற்றப்படவேண்டும்.

Copyright ANCP

“நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னை பின்பற்றுகிறவன் இருளிலே நடக்க மாட்டான்.” (யோவா. 8 : 12.) என்று இயேசு சொல்லுகிறார். உன்னுடைய சுயமுயற்சியினாலோ, உன்ஞானத்தினாலோ, மனிதஞானத்தினாலோ, உன் உள்ளத்திலுள்ள இருளைப் போக்கிவிட உன்னால் இயலாது! உன் இருதயத்தில் உள்ள பாவமாகிய இருள் நீங்குவதற்கு, எளிதான, திட்டமான, துரிதமான, மிக பலிதமான ஒரேவழி, ஒளியாகிய இயேசு கிறிஸ்துவை உன் உள்ளத்தில் ஏற்றுக்கொள்வது தான்! இருண்ட இரவிலே, சிறு நட்சத்திரங்களும், நிலவும், சிறு வெளிச்சம் தரலாம். ஆனால், சூரியன் உதிக்கும்போது, இருள் மாத்திரமல்ல மேலே சொல்லப்பட்ட கிரகங்களின் சிறு வெளிச்சமும் மறைந்து விடுகிறது! இயேசுவே நீதியின் சூரியன். இயேசு எருசலேம் தேவாலயத்தில் பிரவேசித்த போது, ஆடுமாடு விற்கிறவர்களையும், புறா விற்கிறவர்களையும் துரத்தி, காசுக்காரருடையப் பலகைகளைக்கவிழ்த்து, “என்னுடைய வீடு ஜெபவீடு எனப்படும் என்று எழுதி இருக்கிறது; நீங்களோ அதை கள்ளர் குகையாக்கினீர்கள் என்றார்.” மத். 21:13. உன்னுடைய, இருதயம் தேவனுடைய வீடாக, ஆலயமாக இருக்கவேண்டுமென்பது, தேவனுடைய அனாதி தீர்மானமாயிருக்கிறது! அவர் அதிலே வாசமாயிருந்து, அதை அழகுப்படுத்தி, ஒளியினாலும் அன்பினாலும், சந்தோஷத்தினாலும் நிறைக்க விரும்புகிறார்! இயேசு நமது பாவங்களை மன்னிக்கமாத்திரமல்ல, நம்மை பாவத்தின் வல்லமையினின்றும், அடிமைத்தனத்தினின்றும்

Copyright ANGP


மீட்டு விடுவிக்கவே வந்தார்! "குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்." யோவா. 8:36.

## 3. மூன்றாவது படம்

அடுத்தப்படம் உண்மையாக மனம்திரும்புகிற ஒரு பாவியின் இருதயத்தைக் காட்டுகிறது. அவனுடைய பாவத்தின் மிகுதியான அகோரத் தன்மையையும், அவைகளுக்காக இயேசு சிலுவையில் மரித்ததையும், இப்போது காண்கிறான்! தேவனுடைய வசனத்தின் மூலமாக தூதன் சிலுவையை அவனுக்குக் காண்பிப்பதை பார்க்கும்போது, அவன் தன் மிகுதியானப் பாவங்களை நினைத்து, மனவேதனையும், துக்கமும் அடைந்து. நொறுங்குண்ட நடுங்குண்ட இருதயமுடையவனாகிறான்! தேவனுடையக் குமாரனாகிய இயேசு கிறிஸ்து, அவனுடையப் பாவங்களைப் போக்க, சபிக்கப்பட்ட சிலுவை மரத்தில் தன்னுடைய ஸ்தானத்தில், மரணமடைய சித்தங்கொண்டதை அவன் பார்க்கும்போது, இயேசுகிறிஸ்து மூலம் வெளிப்படுத்தப்பட்ட மேலான தேவ அன்பு அவனுடைய இருதயத்தை உருக்குகிறது!

நமது பாவங்களுக்காக, இயேசுகிறிஸ்து வாரினால் அடிக்கப்பட்டு, முள்முடி சூடப்பட்டு, குரூரமான ஆணிகளால், கரங்கால்களில், கடாவப்பட்டு சிலுவையில் மரித்தார் என்ற சத்தியம், மனம்திரும்புகிற பாவிக்கு, தெளிவாகவும் ஆழமாகவும் விளக்கப்படும்போது, அவனுடைய

வாழ்க்கையும், இருதயமும், புரட்சிகரமான மாறுதலை அடைகிறது! தன்னைத் தானே காண்பிக்கின்ற கண்ணாடி போன்ற, தேவனுடைய




3. மனம் திரும்புகிற இருதயம்

வசனத்தை அவன் வாசிக்கும் போது அவன் எவ்வளவாய் தேவனைவிட்டு தூரம் போனான் என்றும், அவருடைய கற்பனைகளை எவ்வளவாய்

மீறியிருக்கின்ருன் என்றும் உணருகிருன்! தேவனுக் கேற்கும், ஆழமான பாவ உணர்வு அவனை ஆட்கொள்ளும்போது அவன் அழுகையோடும், கண்ணீரோடும், தன் உள்ளத்தை தேவனுக்கு முன்பாக ஊற்றும்போது, அவனண்டையில் இயேசு கிறிஸ்து நெருங்கி வருகிருர்! தேவனுடைய குமாரனுகிய இயேசு கிறிஸ்துவின் ரத்தம் நம் முடைய சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்தி கரிக்கிறது, என்பதை அவன் உணரும்போது தேவனுடைய அன்பும், சமாதானமும் அவன் உள்ளத்தில் வருகிறது. (i யோவா. 1.7). "நொறுங் குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமா யிருந்து நடுங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக் கிருர்." சங். 34:18. மறுபடியும் கர்த்தருடைய வசனம் சொல்லுகிறது, "சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு, என் வசனத்திற்கு நடுங்குகிற வனையே நோக்கிப் பார்ப்பேன்." ஏசா. 66:2. மகனே, மகளே! திடன் கொள், உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்று இயேசு சொன்ன வார்த்தைகளை பரிசுத்த ஆவியானவர் அவனுடைய செவிகளில் எடுத்துரைக்கிருர்! அவனுக்காக சிலுவையில் சிந்தப்பட்ட இரத்தத்தை அவன் விசுவாசத்தோடு உற்றுநோக்கும் போது அவ னுடைய பாவபாரங்கள் அவனைவிட்டு உருண்டு ஓடுகிறதை அவன் உணருகிருன்! ஏனென்ருல் இயேசு நமது, பாடுகளை ஏற்றுக்கொண்டு, நமது துக்கங்களைச் சுமந்தார்! "நம்முடைய மீறுதல் களின் நிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்

Copyright ANCP

பட்டார்." "கர்த்தரே நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும், அவர்மேல் விழப்பண்ணினர்" ஏசாயா. 53ம் அதிகாரம். பரிசுத்த ஆவியானவரும், தேவ அன்பும், சுத்தமாக்கப்பட்ட இருதயத்தில் வந்து தங்குகிறூர்கள்! விசுவாசத்தின் மூலமாக, இயேசு கிறிஸ்துவையும், சிலுவையையும் அவன் விசுவாசத்தினுல் நோக்கிப் பார்க்கும்போது, தன் பாவங்கள் மன்னிக்கப்பட்டதை அவன் உணர ஆரம்பிக்கிறுன்! தேவகுமாரனுகிய இயேசு கிறிஸ்துவின் ரத்தம், அவனுடைய சகல பாவங்களையும் சுத்திகரிக்கிறது என்ற நிச்சயம் அவனுக்குக் கிடைக்கிறது. (i யோவா 1:7). கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறவன், கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடைகிறுன் என்ற சத்தியம் அவனுக்கு உண்மை என்று விளங்குகிறது! யோவா. 3:16. "அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினுலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது." எபே. 1:7. இந்த அனுபவம் இயேசுவுக்குள் ஒரு பாவிக்குக் கிடைக்கிறது! பாவமான மாமிச இச்சைகளைப் பின் பற்றுவதற்கு பதிலாக, முதலாவது நம்மில் அன்பு கூர்ந்த தேவனுக்காக ஜீவிக்கவும், அவரை சேவிக்கவும், அதிகமாக ஆசைப்படுகிறுன்! உலகத்தையும் அதற்கடுத்த காரியங்களையும் நேசிப்பதைவிட்டு அவன் தேவனையும், அவருடையக் காரியங்களையும் நேசிக்கிறுன். ஆகையால், இந்தப் படத்திலே பாவங்களைக் குறிக்கின்ற, மிருகங்கள் எல்லாம், மனிதனுடைய இருதயத்திற்கு வெளியே

Copyright ANGP


இருப்பதைக் காண்கிறோம்! பிசாசு மாத்திரம், வெளியே போனாலும், மறுபடியும் ஒரு முறை, தன்னுடையப் பழைய இருப்பிடத்தை விட்டுப் போக மனமில்லாமல், எப்படி உள்ளே போகலாம் என்ற மனதோடு, திரும்பிப் பார்த்துக் கொண்டிருக்கிறான்! நாம் விழித்திருந்து ஜெபிக்கவும், பிசாசு நம்மை விட்டு ஓடிப் போகும்படி அவனுக்கு எதிர்த்து நிற்கவும், இயேசு கிறிஸ்து நம்மை எச்சரிக்கிறார்.

## 4. நான்காம் படம்

இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக உண்டாகும், தியாக பலியின் மூலமாக, பூரண சமாதானத்தையும், மீட்பையும், பெற்றுக்கொண்ட ஒரு கிறிஸ்தவனுடைய நிலையை இந்தப் படம் காட்டுகிறது! ஆகையால், அவன் இயேசு கிறிஸ்துவின் சிலுவையை அல்லாமல், வேறு ஒன்றையும் குறித்து மேன்மை பாராட்டான். ஏனென்றால், அதின் மூலமாக உலகம் அவனுக்குச் சிலுவையில் அறையப் பட்டிருக்கிறது! அவனும் உலகத்திற்குச் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறான்! (கலா. 6 : 14.) நாம் பாவத்திற்கு மரித்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, இயேசு கிறிஸ்து சிலுவையின் மேல் மரித்தார்! (i பேது. 2 : 24.) ஒரு உண்மையான கிறிஸ்தவன், உலகத்திற்கு, சிலுவையில் அறையுண்டிருக்கிறான்! நாம் ஆவியின்படியே நடந்து, மாம்ச இச்சைகளை நிறைவேற்றாதிருக்கும்படிக்குக் கட்டளை பெற்றிருக்கிறோம்! (கலா. 5 : 16, 25.)

Copyright ANGP

**கிறிஸ்துவோடு சிலுவையில் அறையப்படட்**
**வன். கலா. 2 : 20. நீங்கள் மரித்தீர்கள், உங்கள்**




4. கிறிஸ்துவுடன் சிலுவையில் அறைப்பட்டவன்

**ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்**
**திருக்கிறது. கொலோ. 3 : 3. நீங்களும் உங்களைப்**

பாவத்திற்கு மரித்தவர்களாகவும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள். ரோ. 6 : 11.

இயேசுவின் வஸ்திரத்தைக் கழற்றின பின்பு அவரை வாரினாலும், கசையினாலும், அடிப்பதற்காக ஒரு தூணில் கட்டினார்கள். அந்தத் தூண் இந்தப் படத்தில் காணப்படுகிறது. நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் விழுந்ததினால், அவர் நமது பாவங்களுக்காக அடிக்கப்பட்டார்! ஏரோதும், அவனுடைய ஜனங்களும், இயேசுவைப் பரிகாசம் பண்ணி வாரினால் அடித்து, பொற் கிரீடத்திற்குப் பதிலாக, ஒரு முட்கிரீடத்தை அவர் சிரசில் வைத்து அழுத்தி, செங்கோலுக்குப் பதிலாக ஒரு கோலை அவர் கையில் கொடுத்து, மறுபடியும் அவரைப் பரிகாசம் பண்ணி, தலை வணங்கி, யூதரின் ராஜாவே, வாழ்க! என்று பரிகாசமாகச் சொன்னார்கள்! அவர் முகத்தில் துப்பி, கையிலிருந்த கோலை வாங்கி, தலையில் அடித்தார்கள்! இவ்விதமாக, இயேசுவை அவமானமாகவும், குரூரமாகவும் பரிகாசம் பண்ணி, அவரை சிலுவையில் அறைவதற்காக வெளியே கொண்டு போனார்கள். பல, பெயர்க் கிறிஸ்தவர்கள், கோவிலில் ஜெபிக்கிறார்கள், திருவிருந்தில் பங்கு எடுக்கிறார்கள், பக்திப் பாட்டுகளைப் பாடுகிறார்கள், என்றாலும், தங்களுடைய தீயச் செயல்களினால், இடைவிடாமல், திரும்பவும், திரும்பவும், தங்கள் இரட்சகரை சிலுவையில் அறைகிறார்கள்! "பரலோகத்

தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே, பரலோக இராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி ; கர்த்தாவே ! கர்த்தாவே ! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை." மத். 7 : 21 – 27 இந்தப்படத்தில் யூதாஸ்காரியோத், முப்பது வெள்ளிக்காசுக்கு, இயேசுவைக் காட்டிக் கொடுத்து, விற்றுப்போட்ட பண முடிப்பையும் காண்கிறோம்! பண ஆசை அவன் இருதயத்தைக் கவர்ந்து கொண்டு, அவன் மனதைக் குருடாக்கியது. விளக்கு, சங்கிலி முதலானவைகள் இயேசுவை இரவிலே கைது செய்த போர்ச் சேவகரால் பயன்படுத்தப்பட்டன. தீர்க்க தரிசனவாக்கியம் நிறைவேறும்படியாகப் போர்ச்சேவகர் சீட்டுப்போட்டு இயேசுவின் வஸ்திரத்தை பங்கிட்டுக் கொண்டார்கள். இந்தச் சீட்டுப் போடுதலை, தற்காலத்தில் பலர் சூதாட்டத்தில் பயன்படுத்துகிறார்கள். "என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு என் உடையின் பேரில் சீட்டுப் போடுகிறார்கள்." சங். 22 : 18. இயேசுவினிடத்திலிருந்து, எல்லாவற்றையும் எடுத்துக் கொண்டு, அவரையோப் புறக்கணித்துச் சிலர் எங்கள் மேல் ஆளுகை செய்ய வேண்டாம் என்றார்கள் ! மனுக்குலத்தார், பொதுவாகத் தேவனிடத்திலிருந்து, மழை, சூரிய வெளிச்சம் இவை போன்ற எல்லா ஆசீர்வாதங்களையும் வாங்கிக்கொள்ள ஆசைப்படுகிறார்கள், ஆனாலோ தங்களை அவருடைய ஆளுகைக்கு ஒப்புவிக்கவிருப்பமில்லாதிருக்கிறார்கள் அநேகருக்குக் கடவுள் தங்களுடையத் துன்பங்களிலும், ஆபத்துக்களிலும், மாத்திரம் உதவி செய்தால்


போதும் என்று நினைக்கிறார்கள்! போர்ச்சேவகர்கள், இயேசுவின் விலாவிலே, ஈட்டியால் குத்தினார்கள். உடனே இரத்தமும் தண்ணீரும் புறப்பட்டு வந்தது! (யோவா. 19 : 33 - 37). சேவல் கூவுகிறதற்கு முன்னே பேதுரு இயேசுவை மும்முறை மறுதலித்தான். ஆனால் பின்னால் மனங்கசிந்து, கண்ணீர் விட்டு மனந்திரும்பினான். நீ உன் வாக்கினாலும், செயலினாலும் இயேசுவை அறிக்கைப் பண்ணுகிறாயா? இல்லாவிட்டால், மனிதர் முன் அவரை அறிக்கைச் செய்ய வெட்கப்படுகிறாயா? "மனுஷர் முன்பாக, என்னை அறிக்கைப் பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைப் பண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்." மத். 10 : 32 - 33. என்று இயேசு சொன்னார்! "தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றாதவன் எனக்குப் பாத்திரன் அல்ல." மத். 10 : 38. என்றும் இயேசு சொன்னார். இயேசு கிறிஸ்துவாகிய பாறையின் மேல் நிற்கிறவன் பாக்கியவான்!

பிளவுண்ட மலையே,
புகலிடம் ஈயுமே!
பக்கம் பட்ட காயமும்,
பாய்ந்த செந்நீர் வெள்ளமும்,
பாவ தோஷம் யாவையும்
நீக்கும்படி அருளும்!

Copyright ANGP

# 5. ஐந்தாம் படம்

தேவனுடைய அபரிமிதமானக் கிருபையினாலும், இரக்கங்களினாலும், சுத்திகரிக்கப்பட்டு, பரிசுத்த




5. தேவனுடைய ஆலயம்

மாக்கப்பட்ட (தூய்மைபடுத்தி, தமக்கென்று சீர் படுத்தப்பட்ட) ஒரு பாவியின் இருதயத்தை இந்தப்

படம் காட்டுகிறது! "ஒருவன் என்னில் அன்பா யிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளு வான், அவனில் என் பிதா அன்பாயிருப்பார்; நாங்கள் அவனிடத்தில் வந்து அவனோடே வாசம் பண்ணுவோம்." யோவா. 14 : 23. என்று கர்த்த ராகிய இயேசு கிறிஸ்து அருளின வாக்கின்படியே, இந்த இருதயம், பிதா, குமாரன், பரிசுத்த ஆவியான வருமாகிய தேவனுடைய மெய்யான ஆலயமாகவும் இருப்பிடமாகவும், மாறிவிட்டது! தேவன், இயேசு கிறிஸ்து மூலம், மனிதனை கனப்படுத்தி, ஆசீர் வதித்து, உயர்த்துகிறார்! (லூக். 1 : 52.).

அன்பு, சந்தோஷம், சமாதானம், விசுவாசம், கலா. 5 : 22, 23. தயவு, நற்குணம், நீடிய பொறுமை, சாந்தம், இச்சையடக்கம்.

இப்போது, இருதயம், தேவனுடைய மெய்யான ஆலயமாகிவிட்டது! பாவம் இப்போது, வெளியே துரத்தப்பட்டுவிட்டது! பொய்யின் பிதாவாகிய சாத்தானால், ஆளப்பட்டு வந்த பலவித மிருகங் களுக்குப் பதிலாக இப்போது சத்திய ஆவியாகிய பரிசுத்த ஆவியானவர், இருதயத்தில் வாசம் பண்ணு கிறார்! அருவருக்கப்படத்தக்கப் பாவத்தின் இருப் பிடமாக இருந்த இருதயம், இப்போது கனி தரும் மரத்தைப் போலவும், தோட்டத்தைப் போலவும் மாறி, கடவுளுக்கும், மனிதனுக்கும் பிரியமான, ஆவியின் கனிகளான, அன்பு, சந்தோஷம், சமா தானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம். விசு வாசம், சாந்தம், இச்சையடக்கம், இவைகளினால் நிறைந்திருக்கிறது! இப்போது, இவன் கனி

Copyright ANGP

கொடுக்கிற மெய்யான திராட்சைச் செடியான இயேசு கிறிஸ்துவில், ஒரு கொடியாக இருக்கிறான்! அவன் கிறிஸ்துவுக்குள் நிலைத்திருப்பதும், கிறிஸ்துவின் வசனம் அவனில் நிலைத்திருப்பதுமே அவன் கனிகொடுப்பதின் இரகசியம்! (யோவா. 15 : 1-10). அவன் ஆவியானவரால் நிரப்பப்பட்டு, ஞானஸ்நானம் பெற்றிருப்பதால் இப்போது மாமிசத்தையும் அதன் இச்சையையும் மேற்கொள்வதற்கும், தனது பழைய மனிதனை சிலுவையில் அறைவதற்கும் வல்லமைப் பெற்றவனாக இருக்கிறான்! பரிசுத்த ஆவியானவரின் சக்தியினால், ஆவிக்குள் நடக்கவும், மாமிசத்தை ஜெயிக்கவும் தகுதியடைகிறான்! தற்போது அவன் பார்க்கிற, கேட்கிற, உணருகிற காரியங்களினால், ஜீவிக்காமல் விசுவாசத்தினால் ஜீவிக்கிறான். ஏனென்றால், இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசமே, உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்! இப்போது, அவன் ஒரு ஜீவனுள்ள, நிச்சயமான நம்பிக்கையினால், வாழ்க்கை நடத்தி, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதிசீக்கிரம் திரும்ப வருவார் என்ற மகிமையின் நம்பிக்கையினால், பலப்படுத்தப்படுகிறான்!

என்றென்றைக்கும், நிலைத்திருக்கிற, தேவ அன்பினாலும் வாழ்கிறான். "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்." மத். 5 : 8. தாவீது அரசன் எவ்வளவோ, சம்பத்துடையவனாயிருந்தும், புறம்பே இருக்கிற சத்துருக்கள் மேல் ஜெயமுடையவனாயிருந்தும், தன்னுடைய இருதயத்திற்குள்ளே

Copyright ANCP

இருந்த ஒரு மாபெரும் போராட்டத்தையும், தனது ஆழ்ந்த உள்ளான தேவையை உணர்ந்தவனாக, "சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்; நிலவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்." (சங். 51 : 10.). என்று ஜெபிக்கிறான். தாவீது ராஜா, செய்ததுபோல, உத்தம மனஸ்தாபத்தோடு கடவுளிடம் வந்து, கடவுளே தனக்குள் ஒரு புது இருதயத்தை சிருஷ்டிக்க வேண்டுமென்று ஜெபித்தாலல்லாமல், ஒருவனும் தன் இருதயத்தை தூய்மையாக்கவும், தூய்மையான இருதயத்தைத் தனக்குள்ளே சிருஷ்டித்துக் கொள்ளவும் கூடாது! உன்னுடைய வாழ்க்கையிலே, ஒரு புதிய காரியத்தைச் செய்ய தேவன் அக்கரையுடையவராயிருக்கிறார். உன் சுய நீதியாகிய, கிழிந்த கந்தல் வஸ்திரத்தை உன்னுடைய வாக்குறுதியினாலும், தீர்மானங்களினாலும், ஒட்டுப்போட்டுத் தைத்து, உன் இருதயத்தை தேவனுக்கேற்றத் தகுதியான வாசஸ்தலமாக்கிக்கொள்ள முடியாது! தேவன் உனக்கு உதவி செய்ய அதிக விருப்பமுள்ளவராய் இருக்கிறார், ஏனென்றால், அவரே, "நான் உங்கள் மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன், நீங்கள் சுத்தமாவீர்கள். உங்களுக்கு நலமான இருதயத்தைக்கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாமிசத்திலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக்

Copyright ANGP

கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களை கைக்கொள்ளவும் அவைகளின்படிச் செய்யவும் பண்ணுவேன்.'' எசே. 36 : 25–27. என்று வாக்குறுதிபண்ணுகிறார். தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் ரத்தத்தால் முத்திரையிட்ட, புதிய உடன்படிக்கையின் பொருள் இதுவே! இந்தப்படத்தில் மறுபடியும் தேவதூதன் தோன்றுவதைப்பார்க்கிறோம். நித்திய ஜீவனை சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களுக்குப் பணிவிடை செய்யவும், தமக்கு பயந்தவர்களைச்சூழ காவலாளராக இருக்கவும் நியமிக்கப்பட்டவர்களே தேவதூதர்கள்:. (சங். 34:7; 91:11; தானி. 6:22; மத்தே. 2:13; 13:19; 18:10; அப்போ. 5:19; 12:7–10). பிசாசு, மறுபடியும், தான் முன்னிருந்த பழைய இருப்பிடத்திற்குள் நுழையச் சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருப்பதையும், இருதயத்தின் வெளியே பக்கத்தில் நின்றுக்கொண்டிருப்பதையும் இப்படத்தில் காண்கிறோம். ஆதலால் நாம் விழித்திருந்து ஜெபிக்கும்படியாக எச்சரிக்கப்படுகிறோம்! "தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில் உங்கள் எதிராளியாகியப் பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித் திரிகிறான்." i பேது. 5:8. தேவனால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களை, தனது தந்திரத்தினால் பிசாசு வஞ்சிக்க முயல்வதற்கும் உலக இச்சைகளினால், விழிப்பற்ற பரிசுத்தவான்களைப் பிடித்துத் தள்ளுவதற்கும் சாத்தான் ஒளியின் தூதன் வேஷத்தைப்

Copyright ANCP


பலமுறை தரித்துக் கொள்ளுகிருன்! ஆனால் நாம் பிசாசுக்கு எதிர்த்து நின்ருல் அவன் நம்மை விட்டு ஓடிப்போவான். (யாக். 4.7).

## 6. ஆருவது படம்

பின்மாற்றக்காரனுடையப் பரிதாபகரமான நிலையை இந்தப்படம் காண்பிக்கிறது! மூடப்பட்டுக் கொண்டிருக்கிற ஒரு கண், அவனுடைய கிறிஸ்தவ ஜீவியத்தில், குளிர்ந்து, நித்திரை மயக்கமாய் இருப்பதைக் காட்டுகிறது! ஆனால் அடுத்த கண்ணே வெட்கமின்றி சுற்றிப் பார்த்துக்கொண்டு உலகத்தோடு சிநேகம் பண்ணுவதைக் காட்டுகிறது! அவனுக்குள்ளே இருந்த ஒளி மங்கி அவன் கிறிஸ்துவோடு பாடு அனுபவிக்கிற அடையாளங்கள், பலமற்றுச் சாய்ந்து போகிறதை காணலாம். அவன் சோதனைகளால் சூழப்பட்டு, அவைகளை எதிர்ப்பதற்குப் பதிலாக, அவைகளுக்குப் பணிகிருன். அவன் தேவனுடைய சப்தத்திற்குச் செவி கொடுப்பதற்குப் பதிலாக, சோதனைக்காரனுடையப் போலி வாக்குகளுக்கும், தந்திர ஆலோசனைகளுக்கும் செவிக்கொடுக்கிருன். உலக ஆசையை, வெளிவேஷமான, சமயக் கொள்கைகளினுல் மூடிக்கொண்டு, இன்னும் ஆலயத்திற்குச் சென்றுக்கொண்டிருந்த போதிலும், அவன் இருதயத்தில் தேவனுடைய அன்பு குறைந்து போனதாகக் காணப்படுகிறது! இரு அபிப்பிராயங்களின் மத்தியில், இரு மனது உடையவனுய். ஆகிவிடுகிருன்! உலகத்தின்மேல் ஆசைவைத்துக்கொண்டு, கடவுளிடம் அன்புள்ள

Copyright ANCP

வன் போலப் பாசாங்குப் பண்ணுகிறன் ! அவனுடைய மனச்சாட்சியாகிய நட்சத்திரம் ஒளி




6 சோதிக்கப்பட்டு பிரிக்கப்பட்ட இருதயம்

மங்கிப் போகிறது! சந்தோஷத்தோடு சிலுவையைச் சுமக்காததினுல் அது அவனுக்கு வரவேற்கப்படாத மிகுந்த பாரமாக ஆகிறது. அவனுடைய விசுவாசம்

தடுமாறி, அவன் தேவனோடு ஜெபத்தில் உறவாடு வதை விட்டு, தன் இருதயத்தின் நிலைமையைப் பற்றிக்கவலையீனமாக ஏனோ தானோ என்றிருந்து வெளியே ஒளிந்துக்கொண்டிருக்கும் சோதனைக் காரனுக்கு மெல்ல, மெல்ல இடம் கொடுக்கிறான்! உண்மையான விசுவாசிகளோடு ஐக்கியம் வைத்துக் கொள்வதைவிட உலக சிநேகிதர்களோடு இன்பம் கொள்கிறான் !

பெருமைக்கு அடையாளமாயிருக்கிற மயில் மறு படியும் அவன் இருதயத்திற்குள் நுழையப் பிரயாசைப்படுகிறது ! அவன், கிருபையினால் மாத் திரம் இரட்சிக்கப்பட்டவன் என்பதை ஒருவேளை மறந்தவனாகி, பெருமையுள்ள கிறிஸ்தவனாக மாறி விடுகிறான் ! குடிப்பழக்கம், மறுபடியும் உள்ளே வர, அவன் இருதயத்தின் கதவைத் தட்டுகிறது ! ஒரு தனிப்பட்டச் சந்தர்ப்பத்தில், உலக சிநேகிதர் மத்தியில், தான் ஒரு விகர்ப்பமானவன், மனோதிட னற்றவன், சமுதாயத்திற்கு ஒவ்வாதவன் என்று மற்றவர்கள் எண்ணுவார்களோவென்று. வெட்கத் தோடு இருக்கும்போது, இந்த ஒரு சந்தர்ப்பம் அவன் ஆவிக்குரிய ஜீவியத்தைக் கெடுத்துவிடாது என்று பிசாசு சொல்லுகிறான்! மாமிச சிந்தைகளும், அதின் ஆசை இச்சைகளும் அவனை அழுத்துகிறது. ஒழுக்கமற்ற பகடிப் பேச்சுகளை ரசிக்கவும், நெறி யற்றப் படக் காட்சிகளைத் திரும்பத் திரும்ப இன்பத் தோடுப் பார்க்கவும், சீர்கெட்ட தோழர்களோடு சேரவும், ஐயம் நிறைந்தக் கேளிக்கைகளும், நடனச் சாலைகளுமே தஞ்சமென்றிருக்கவும் தலைப்பட்டு, ஒரு பாவம் காரியமில்லை, அது இயற்கைதான் என்று

Copyright AVGP

பிசாசு எடுத்துக்கூறும் துர்ஆலோசனையை ஏற்றுக் கொள்ளத் தூண்டப்படுகிறான்! தீமையும், அசுத்த சிந்தையுமாகியக் காட்டுப் பறவைகள், நமது தலைக்கு மேலே பறந்துச் செல்வதைத் தடுக்க இயலாது! ஆனால் அவைகள், நம்மில் தங்கி நமது இருதயத் திலே, கூடுகட்டி, முட்டையிட்டு, துர்ச்செய்கைகளா கியக் குஞ்சுகளைப் பொறித்துவிட இடம் கொடுப்போ மானால், நாம் குற்றவாளிகளாவோம். நாம் நமது சுண்டு விரலை, பிசாசுக்குக் கொடுத்தால், அவன் முழு கையையும் பற்றிக்கொண்டு, நமது ஆத்துமா வையும், ஆவியையும், நித்திய நரகத்திற்கு இழுத் துக்கொண்டுப் போய்விடுவான்!

வாலிபத்திற்குரிய இச்சைகளுக்கு, விலகி யோடவும் பாவம் எந்த உருவத்தில் தோன்றினா லும் அவைகளோடு விளையாடாதிருக்கவும், தேவன் வினயமாக எச்சரிக்கிறார். விடுதலையும். ஜெயமும், கொடுக்கிற இயேசுவிடம் ஓடுவோம்! இந்தப் படத்தில், இருதயத்தைக் கத்தியால் தாக்கு கிற மனிதன், கிறிஸ்தவ மார்க்கத்தை ஏளனம் பண்ணி, எதிர்த்துப் பேசுகிறவர்களைக் காட்டுகிறது. அவதூறு பேசும் நாவுகளாலும், பரியாச உதடு களாலும், அவர்கள் கிறிஸ்தவர்களுடைய இருத யங்களைக் குத்திக் காயப்படுத்துகிறார்கள்! பிளவுப் பட்ட இருதயம் இவ்விதத் தாக்குதல்களைத் தாங்கிக் கொள்ள முடியாது! மனிதர்கள் என்னச் சொல் வார்களோ, செய்வார்களோ என்ற அச்சத்தால், தேவனுக்குப் பயப்படுவதைப்பார்க்கிலும், மனிதர் களுக்கு அதிகமாகப்பயப்பட்டு, அவர்களுக்கு

Copyright ANGP


அடிமையாகி, தேவனைவிட்டு தூரம் போகிறான். துன்பங்களும், ஏமாற்றங்களும் வரும் சமயங்களில் கோபமும், தீய மனநிலையும் தோன்றி, இருதயத்தில் பலவந்தமாக நுழைகின்றன! மற்றவர்கள் சித்தியும், விருத்தியும் அடையும்போது, பொறாமையாகிய தீயப்பாம்பு காணப்பட்டு, நமக்குத் தெரியாமலே, நுழைந்து சிறிது இடம் கொடுத்தால், பகையையும், பெருமையையும் உண்டாக்கும். "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்." மத்தே 26 : 41. என்ற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் எச்சரிப்பை, கவனியாதுவிட்டால் எளிதில் பண ஆசை நம்முடைய இருதயத்திற்குள் புகுந்துவிடும். "இப்படியிருக்கத் தன்னை நிற்கிறவன் என்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக் கடவன்." I கொ. 10 : 12. பிசாசினுடைய எல்லாத் தந்திரங்களுக்கும், எதிர்த்து நிற்குமாறு, நாம் தேவனுடையச் சர்வாயுதவர்க்கம் முழுவதையும் தரித்துக்கொள்வோமாக! (எபே. 6 : 11 – 18.)

## 7. ஏழாவது படம்

ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், பரம ஈவை உருசி பார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், பின்வாங்கிப்போன மனிதனுடைய இருதயத்தின் நிலையை இந்தப்படம் காட்டுகிறது! சத்தியச் சுவிசேஷமாகிய நற்செய்தி, பலமுறை தெளிவாக அறிவிக்கப்பட்டும், அதைக் கேட்டு மனந்திரும்பாமலும் தேவனுக்குத் தன்னை ஒப்புக்கொடாமலும் இருக்கிற ஒரு ஆளின் நிலைமையையும் இந்தப் படம்

Copyright ANCP

காட்டுகிறது! தேவன் பல முறை எடுத்துச் சொல்லியும், கேளாமல் தன் இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டு தன் சுயமுயற்சியால், தன்னைச் சீர்ப்படுத்திக்கொள்ள முயல்கிறவன், அதிகக்கேட்டுக்குள்ளாவான். பின்மாற்றக்காரரின் நிலைமையைப்பற்றி இயேசு தாமே இவ்விதமாய்ச் சொல்லி இருக்கிறார். “அசுத்த ஆவி ஒரு மனுஷனைவிட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்




7. பின்வாங்கிப்போன அல்லது கடினப்பபட்ட இருதயம்

பாறுதல் தேடியும் கண்டடையாமல்: நான்விட்டு வந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்று சொல்லி, அதில் வரும்போது அது பெருக்கி ஜோடிக்கப்பட்டிருக்கக் கண்டு, திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டு வந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும்; அப்பொழுது அந்த மனுஷனுடைய முன் நிலைமையிலும் அவன் பின் நிலைமை அதிகக் கேடுள்ளதாய் இருக்கும் என்றார்". லூக். 11:24–26. "நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப் பட்டப் பன்றி சேற்றிலே புரளவும், திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின் படியே அவர்களுக்குச் சம்பவித்தது." ii பேது. 2:22. இந்த வசனங்கள் பின்மாற்றக்காரனுடைய அல்லது மனந்திரும்பாத பாவியின் நிலைமையைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன. பாவம் தனது சகல வஞ்சகத்தோடு, அவனுடைய இருதயத்தை ஆளுகை செய்யவும், குடியிருக்கவும் வந்திருக் கிறது! அவனுடைய முகப்பாவனையே அவனு டைய நிலைமையை ஒருவாறு காட்டுகிறது. பாவ மும், பரிசுத்த ஆவியானவரும் ஒருமித்து வாசம் பண்ண முடியாததால், சாந்தமுள்ளப் புறாவாகிய பரிசுத்த ஆவியானவர், அவனுடைய இருதயத்தை விட்டு வெளியேறி இருக்கிறார்! ஒரு இருதயம் ஒரே சமயத்தில், தேவனுடைய ஆலயமாகவும் பிசாசினுடையக் குகையாகவும் இருக்க முடியாது. தேவனுடைய வசனமாகியத் தூதன் துக்கத்தோடு வெளியேறுகிறதுமல்லாமல், கெட்ட குமாரனைப்

Copyright AIGP

போல் திரும்பி அவனோ, அவளோ, மறுபடியும் மனந் திரும்பமாட்டார்களோ என்று, திரும்பி நம்பிக்கை யோடு பார்க்கிறான், "பன்றிகள் தின்கிற தவிட்டினாலே தன் வயிற்றை நிரப்ப ஆசையாயிருந்தான், ஒருவனும் அதை அவனுக்குக் கொடுக்கவில்லை. அவனுக்குப் புத்தி தெளிந்தபோது, அவன் என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோப் பேருக்குப் பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப் போய்: தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமக்கு முன்பாகவும் பாவம் செய்தேன்." லூக். 15:16–18. என்றான். மனம் திரும்பி வந்த மகனைக் கண்ட தகப்பன், அவனுக்கு மன்னித்து, அவனைத் திரும்பச் சேர்த்துக்கொண்டான். இந்தப் படத்தில் காணப்படும் இருதயத்தில், உண்மையான மனம் திரும்புதல், தேவனை நோக்கிப் பார்ப்பது அல்லது இயேசுவின் பாதத்தில் மன்னிப்பைத் தேடுவது, ஆகியவற்றின் ஒரு அடையாளமும் காணப்படவில்லை. அவனுடைய மனச்சாட்சி பழுக்கக் காய்ச்சிய இரும்பினால் சூடு போடப்பட்டதுபோல மவுனமாயிருக்கிறது! அவனுக்குக் காதுகள் இருந்தும், இயேசுவின் அன்பின் சப்தத்தைக் கேட்கக்கூடாதவனாக இருக்கிறான். அவனுக்குக் கண்கள் இருந்தும்; அவனுடையக் காலடியில், விரிவாய்த் திறந்திருக்கிற நரகப் பாதாளத்தைக் காணக் கூடாதவனாக இருக்கிறான்! அவன் தன் பாவங்களில், நிலைத்திருக்கிறதைக் குறித்து, கொஞ்சமும் வெட்கமில்லாதவனாக இருக்கிறான்!

பிசாசு அவனுடைய இருதயத்தை ஆளுகைச் செய்ய வந்து, ஒரு அரசனைப்போல தன் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறான்! வெள்ளையடிக்கப்பட்டக் கல்லறையைப்போல, ஒரு வேளை அவன் வெளியரங்கமாக, யோக்கியமும் மதிப்பும் உள்ள பக்தி வேஷக்காரனாகத் தன்னை எண்ணிக்கொண்டாலும், உள்ளேயோ "மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கிறான்." (மத். 23 : 27.). சத்திய ஆவியானவருடைய இடத்தை, பொய்யின் பிதாவாகியப் பிசாசு, கைப்பற்றிக் கொண்டான்! ஒவ்வொரு மிருகமும், ஒவ்வொரு பாவமும், ஒரு தனிப்பட்ட பிசாசோடும், அசுத்த ஆவியோடும் சேர்ந்து, அவனுடைய இருதயத்தை இருப்பிடமாக்கிக்கொண்டு இருக்கிறது. கொடிய வேதனைகளின் கட்டுகளிலிருந்து அவன் தன்னை விடுவித்துக்கொள்ள விரும்பினாலும், அவைகள் அவனைக் கட்டி வைத்திருக்கின்றன. "மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம் பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; தேவனுடையக் குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தம் செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவுக் கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள்". எபிரே. 10 : 28-29. (ii பேது. 1 : 14). இந்தப் படத்தின் காட்சி, உன் இருதயத்தின் நிலைமைக்கு ஒத்திருக்குமானால். பிரிய சிநேகிதா! தாமதமின்றி உன் இருதயத்தின் ஆழத்திலிருந்து, தேவனை நோக்கிக்

Copyright ANGP

கூப்பிடு. நீ, மெய்மனஸ்தாபத்தின் ஆவியோடு அவரிடம் வருவாயாஞல், அவர் உன்னுடைய எல்லாப் பாவங்களையும் மன்னிக்கச் சித்தம் உடைய வராகவும், உன்னை முற்றும் முடிய இரட்சிக்கவல்ல வராகவும், இருக்கிருர்! நீ அவருக்கு இடம் கொடுத்து, வேண்டிக்கொள்வாயாஞல், அவர் சாத்தானையும், இருளின் பூதகணங்களையும் கட்டி, அவைகளை உன் இருதயத்தில் இருந்து வெளியே எறிந்து விடுவார்! "உமக்குச் சித்தமாஞல் என்னை சுத்தமாக்க உம்மால் கூடும்," என்று சொல்லி இயேசுவண்டை வந்த குஷ்டரோகியைப்போல, நீயும் அவரிடம் வா! "எனக்குச் சித்தமுண்டு நீ சுத்தமாகு," என்று இயேசு உனக்கும் சொல்லுவார். (மாற் 1 : 40, 41.) ஆஞல், நீ உன் இருதயத்தைக் கடினப்படுத்தி, வெளிச்சத்தைக் காட்டிலும், இருளைச் சிநேகித்தாயாஞல், உனக்கு ஒரு நம்பிக் கையும், உதவியும் இல்லை. ஏனென்ருல் நீ ஜீவனுக் குப் பதிலாக மரணத்தைத் தெரிந்துக்கொண்டிருக் கிருய்! "பாவத்தின் சம்பளம் மரணம்" ரோ. 6 : 23.

## 8. எட்டாவது படம்


இப்படத்தில் காலத்தைக் கடத்திவைக்கிற அல்லது கடினப்பட்ட ஒரு பாவி மரணத்தருவாயில் இருக்கக் காண்கின்ருேம்! அவனுடைய சரீரம் வேதனையிஞலும், அவனுடைய ஆத்துமா மரண பயத்திஞலும் நிறைந்திருக்கிறது. இங்கு எலும்புக் கூடுபோலத் தோன்றுகிற மரணம், அவன் எதிர் பாராத, விரும்பாத நேரத்தில், வந்து இருக்கிறது! பாவத்தின் வஞ்சக சிற்றின்பங்கள் கடந்துவிட்டன! ஆஞல் இப்போது, பெரிதும் பயங்கரமுமான பாவத்

தின் பலன் குரூரரூபமாய் அவன் முன் நிற்கிறது! நரகத்தின் கொடிய வேதனைகளால், இப்போது பிடிக்கப்பட்டிருக்கிருன். இப்போது அவன் ஜெபிக்க விரும்பினுலும், அவன் தேவ அன்பை பலகாலம் புறக்கணித்ததால், இப்போது அவன் தேவனேடு ஐக்கியப்பட முடியாதவனுக இருக்கிருன்! அவனுடையப் பழைய சிநேகிதர்கள் அவன் படுக்கையண்டை நிற்கவும் பயப்படுகிருர்கள்! அவர்களுடைய ஆறுதல் கூறும் வெறும் வார்த்தைகள், அவனுக்குப் பயன்படாதே போகின்றன! ஒரு வேளை, அவன் அநீதியாய் சம்பாதித்தச் செல்வம், அவனுடைய ஆயுளைக் கூட்டவோ, அவனுடைய ஆத்துமாவை இரட்சிக்கவோ அல்லது அவனுடைய ஆத்தும வேதனையைத் தணிக்கவோ முடியாது! இப்போது, அவன் தேவனைப்பற்றி சிந்திக்க முடியாத நிலையில் இருக்கிருன். ஏனெனில் பிசாசு அதற்குச் சந்தர்ப்பம் இல்லாதபடித்தடுத்து விடுகிருன்!

ஒரு காலத்தில் அவன் நேசித்து, ஜீவியத்தின் இலக்காக வைத்திருந்தக் காரியங்கள், அவனைப் பரிகாசம் பண்ணுகிறது போலக் காணப்படுகிறது! இரட்சிப்பின் அனுபோகமற்ற அவனுடைய ஆத்தும மேய்ப்பர்கள் கூட அவனுக்கு இப்போது உதவிச்செய்ய முடியாது. ஏனெனில் அவன் தேவனுடையக் கிருபையை அசட்டைப்பண்ணி நியாயப்பிரமாணத்தின் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாயிருக்கிருன். "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" எபி. 10 : 31. என்ற சத்தியத்தை இப்போது உணர ஆரம்பிக்

Copyright ANGP

கிறான். ஒரு, வசதியான நேரத்திலோ அல்லது மரணப்படுக்கையிலோ தேவனோடு நல்மனம் பொருந்திக்கொள்ளலாம் என்று நம்பிக்கை வைத்திருந்தான்! ஆனால் இப்போதோ, தருணம் தவறி




8. பாவியின் நியாயத் தீர்ப்பு.

விட்டது என்று காண்கிறான்! ஆயிரக்கணக்கான மக்கள், தங்கள் மரணப் படுக்கையில் கடவுளைத்

தேடத் தருணம் இல்லாமல், திடீரென்று மரண மடைகிறார்கள்! ஆகையால் கர்த்தரைக் கண்டடையத் தக்கச்சமயத்தில் அவரைத் தேடுவது மிகவும் அத்தியாவசியம். தன்னுடைய ஜீவியக் காலத்தில் தேவனுடைய அன்பையும், கிருபைகளையும், உதறித்தள்ளி இப்போது மரணத் தறுவாயிலிருக்கும் பாவி, அவருடைய ஆறுதலான மீட்பின் இனிய வசனங்களைக் கேட்பதற்குப் பதிலாக, "சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள்" மத். 25 : 41. என்ற வார்த்தைகளை, தான் புறக்கணித்த நியாயாதிபதியாகிய இரட்சகரிடமிருந்து கேட்கிறான்!

"ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத் தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது." எபி 9 : 27.

Copyright ANCP

## 9. ஒன்பதாவது படம்.


மிகுந்தப் போராட்டங்களையும், சோதனைகளையும், சகித்து மேற்கொள்ளுகிற ஒரு கிறிஸ்தவனின் நிலையை இந்தப்படத்தில் காண்கிறோம். அவன் எப்பக்கத்திலும், நெருக்கப்பட்டும், சோதிக்கப்பட்டும், அவன் கடைசி பரியந்தமும் சோதனையைச் சகித்து நின்று, கர்த்தராகிய இயேசுவில் முற்றும் ஜெயம்கொள்ளுகிறவனாக இருக்கிறான்! அவன் கிறிஸ்தவ ஜீவியமாகிய ஓட்டப்பந்தயத்தில் பிரவேசித்தது மன்றி, முயற்சித் திருவினையுடையவனாக,

வலதுபுறமாவது, இடதுபுறமாவது சாயாமல், "விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாகிய," (எபி. 12 : 1, 2). இயேசுவை நோக்கி பொறுமையோடு ஓடுகிறான்!

தேவனுடையப் பிள்ளையை வழிவிலகச்செய்ய, பிசாசு தன்னுடைய சகலச் சேனையோடு விசுவாசமுள்ள இருதயத்தைச் சூழ்ந்து நிற்கிறான்! பெருமை, பண ஆசை, துன்மார்க்கம் ஆகிய மற்ற பிசாசுகளும் இங்கே சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன. சிறுத்தைப் புலிக்குப்பதிலாக இங்கே கழுதை காணப்படுகிறது! ஏனென்றால் பாவம் பலதிறப்பட்ட ரூபங்களில், நம்மிடத்தில் நெருங்கி, வித்தியாசமான வேஷத்திலும், பெயரிலும் தன்னை மறைத்துக் கொள்ளுகிறது! ஆனால் விழிப்புள்ள கிறிஸ்தவன், மார்க்கம் என்ற போர்வையைத் தரித்திருந்தாலும், ஒளியின் தூதனைப்போலக் காணப்பட்டாலும், பாவத்தைக் கண்டுபிடித்துக்கொள்ளுகிறான்! ஏனென்றால் தேவனுடைய வசனமும் சத்திய ஆவியும் அவனை வழி நடத்துகிறது. ஒரு மனிதன் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் திராட்சை ரசம் வைத்துக் கொண்டு, உலக சந்தோஷத்தினால் அவனை மயக்கும்படி, ஒரு கிறிஸ்தவனைச் சுற்றி நடனம் ஆடுகிறான்! தன்னை முற்றிலும் கடவுளுக்கென்று நேர்ந்துக்கொண்ட கிறிஸ்தவன் பாவத்திற்கும், உலகத்திற்கும், சிலுவையில் அறையுண்டிருக்கிறபடியால், இந்த சோதனை அவனை எவ்விதத்திலும் மேற்கொள்ள முடியவில்லை! படத்தில்

Copyright ANGP

இரண்டாவது மனிதன், ஒரு கிறிஸ்தவனைக் கத்தி யால் குத்துகிறான். கர்த்தருடைய சத்துருக்களைக் கொண்டும் விசுவாசிகள் என்று அழைக்கப்படு கிறவர்களைக்கொண்டும், தீயப்பேச்சு, புறம் கூறுதல்




9. ஜெயம்பெறுகிற இருதயம்.

பயமுறுத்தல், பரிகாசம் செய்தல் ஆகிய இவை களால் ஒரு பெய் விசுவாசியின் இருதயத்தை இடை

விடாமல் பிசாசு குத்திக்கொண்டிருக்கிறான்! ஜனங்கள் அவனைப்பற்றி என்னச் சொன்னாலும் கவனியாமல், தேவன் அவனைப்பற்றி என்னச் சொல்லுகிறார் என்று கவலையுள்ளவனாக இருக்கிறான்! "என் நிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப் படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்; சந்தோஷப்பட்டு களிகூறுங்கள்: பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்.'' மத். 5 : 11, 12 என்று இயேசு சொன்ன வார்த்தைகளை நினைவு கூறுகிறான். பாவம், சுயநலமாகிய மாமிசம், பிசாசு, இவைகள் ஒரு கிறிஸ்தவனை தேவனுடைய அன்பை விட்டு பிரிக்க, இடைவிடாமல் முயற்சி செய்கிறது! ஆனால், அவன் மிகுந்த மகிழ்ச்சியோடும், நம்பிக்கையோடும் "கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவை எல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூறுகிறவராலே முற்றும் ஜெயம் கொள்ளுகிறவர்களாக இருக்கிறோமே." ரோ. 8 : 36, 37. என்று அறைகூவுகிறான். தீங்கு நாளிலே அவைகளை எதிர்க்கவும் சகலத்தையும் செய்து முடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடையச் சர்வாயுத வர்க்கத்தை அணிந்துக் கொண்டு எல்லாப் போராட்டங்களையும், சோதனைகளையும் மேற்கொண்ட இயேசுவைப் போல நாமும் மேற்கொண்டு, மகிமையின் கிரீடத்தைப் பெற்றுக்

Copyright ANGR

கொள்ளுவோம்! அவனுடைய மனச்சாட்சியாகிய நட்சத்திரம், தெளிவாகவும் பிரகாசமாகவும் இருக்கிறது! அவனுடைய இருதயம் பரிசுத்த ஆவியாலும் விசுவாசத்தினாலும் நிறைந்திருக்கிறது! தேவ வசனங்களைக் காட்டுகிற தேவதூதன், முடிவு பரியந்தம் நிலைத்திருக்கிறவர்களுக்கு தேவன் அருளிச் செய்திருக்கிற விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை ஞாபகமூட்டுகிறான். "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக் கொடுப்பேன்." "ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை" "ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும் அந்தக் கல்லின் மேல் எழுதப்பட்டதும், அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன்." "ஜெயங் கொண்டு முடிவு பரியந்தம் என் கிரியைகளைக் கைக்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு, நான் என் பிதாவினிடத்தில் அதிகாரம் பெற்றது போல, ஜாதிகள் மேல் அதிகாரம் கொடுப்பேன்." "ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப் போடாமல், என் பிதாமுன்பாகவும் அவருடைய தூதர்முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்." "ஜெயங் கொள்ளுகிறவனெவனோ

Copyright AIGP

அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை." "ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள் செய்வேன்" வெளி. 2; 7 11, 17 26. வெளி. 3: 5, 12, 21 அவனுடைய இருதயமும், பணமும் கூட தேவனுக்குப் பிரதிஷ்டைப் பண்ணப்பட்டிருக்கிறது என்பதை, திறந்திருக்கும் பணப்பை காட்டுகிறது! தன்னுடைய உலக சம்பத்தை வீணிலே செலவழிக்காமல், ஏழைகளுக்கு உதவி செய்து, தசம பாகமும் காணிக்கையும் செலுத்தி, தனக்குண்டான யாவற்றையும் கடவுளின் மகிமைக்கென்றே செல விடுகிறான்! ரொட்டியும், மீனும், அவனுடைய சுத்தமும், தன்னடக்கமுமான ஜீவியத்தைக் காட்டுகிறது! மது பானத்தினால், தன்னைத் தீட்டுப் படுத்திக் கொள்ளாமலும், இரத்தத்தையாவது, நெறுங்குண்டு செத்ததையாவது வேறெந்த அசுத்தமான ஆகாரத்தையாவது புசியாமலும் இருக்கிறான்! அவனுடையப் பணத்தை வீணிலே விரயம் செய்யாமலும், வெற்றிலைப் போடுவது, புகைப்பிடிப்பது, லாகிரிவஸ்துக்களையும், தீமைவிளைவிக்கும் மருந்துகளையும் உபயோகிப்பது இவைப் போன்றப் பழக்கங்களினால், தேவனுடைய ஆலயமாகியத் தன்னுடைய சரீரத்தைத் தீட்டுப்படுத்திக் கொள்ளாமலும், உடல் நலத்துக்கேற்றச் சுத்தமுள்ள பலமான ஆகாரத்தைப் புசிக்கிறான்! அவனுடைய இருதயமே ஒரு ஜெப வீடாயிருக்

கிறது! எந்தக் காலத்திலும், எந்த சூழ்நிலையிலும் ஒழுங்காக, பயபக்தியோடு ஆலயவழிபாடுகளுக்குப் போகிறான்! அவன் ஜெப வீட்டிலானாலும் சரி, குடும்ப ஜெபத்திலானாலும் சரி, தன்னுடைய இருதயமாகிய உள் அறையிலானாலும் சரி அவன் ஜெபத்தை அதிகம் நேசிக்கிறான். ஏனென்றால், கடவுளோடு ஜெபத்தில் ஐக்கியப்படாமல் ஒரு கிறிஸ்தவன் உயிர்வாழ முடியாது என்பதை அறிந் திருக்கிறான்! திறந்து வைக்கப்பட்டிருக்கும் புத்தகம், அவனுக்கு பரிசுத்த வேதாகமம் ஒரு திறந்த புத்தகமாக இருக்கிறது என்பதைக் காட்டு கிறது. வேத புத்தகத்தை அவன் அனுதினமும் வாசித்து, படித்து, ஞானத்தையும், பலத்தையும், ஜீவனையும், ஒளியையும் சொல்லி முடியாத செல் வத்தையும் கண்டடைகிறான்! வேதபுத்தகம், அவன் கால்களுக்கு விளக்காகவும் அவன் சத்துருவை மேற்கொள்ளும் பட்டயமாகவும் இருக்கிறது! வேத புத்தகம், அவனுடைய ஆத்துமாவிற்கு ஆகாரம், தாகத்தைத் தீர்க்கும் தண்ணீர், அவன் தன்னைத் துப்புரவாக்கிக் கொள்ளும் நீராடும் அறை, தன்னை பரிசோதிக்கும் நிலைக்கண்ணாடி! சிலுவையின்றிக் கிரீடம் இல்லை என்று அறிந்து, சிலுவை சுமக்க ஆசையுள்ளவனாக இருக்கிறான். அவன் கிறிஸ்து வோடு கூட ஒரு புதிய வாழ்க்கை நடத்துவதற் கென்று, உயிர்த்தெழுந்திருக்கிறதை உணர்ந்து, மேலானக் காரியங்களையும், நித்தியமானவை களையும் காணப்படாதவைகளையும் நாடுகிறான்! அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரத்தைப் போலவும், மிகுந்தக் கனி கொடுக்கிற மெய்யான திராட்சை செடியின் கொடியைப் போலவு

மிருந்து தன் தேவனைச்சந்திக்க ஆயத்தமாக இருக்கிறான்! பரிசுத்த ஆவியின் மூலமாக தேவனுடையப் பரிபூரண அன்பு அவனுடைய இருதயத்தில் நிறைந்திருப்பதால் அவனுக்கு மரண பயமில்லை!

## 10. பத்தாவது படம்

இயேசு சொன்னது, "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்." யோவா. 11 : 25,26. "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல் மரணத்தை விட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்." யோவா. 5 : 24. ஒரு கிறிஸ்தவனுக்கு மரணம் வேதனையையோ, பயத்தையோ உண்டாக்குவதில்லை. "மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது! மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே?........நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினாலே நமக்கு ஜெயங் கொடுக்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்!" i கொரி. 15 : 54 – 57. தேவனோடு வாழ்ந்து, அவரோடு நடக்கிறவன், மரணத்திற்குப் பயப்படுகிறதில்லை! அவன் இவ்வுலகத்தை விட்டுப் போகும்போது, மனமகிழ்ச்சியோடு பவுல் அப்போஸ்-

Copyright ANGP

தலனேப்போல, "தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசை யுண்டு, அது அதிக நன்மையாய் இருக்கும்." என்று சொல்லுகிருன். பிலி. 1 : 23.

சிலுவையில் மரித்து தன்னே மீட்டெடுத்த இயேசுவின் முகத்தைப் பார்க்க ஒரு கிறிஸ்தவன் வாஞ்சையுள்ளவனுக இருக்கிருன்! பரிசுத்த ஆவி யானவர் பின்வரும் இயேசுவின் வார்த்தைகளேயும் அவனுக்கு நினேப்பூட்டுகிருர். "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமா யிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படி இல்லாது இருந்தால், நான் உங்களுக்குச் சொல்லி இருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன். நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து, உங்களே என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்." யோவா. 14 : 1–3. "தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளேக் கண்காணவுமில்லே, காது கேட்கவுமில்லே. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லே." i கொ. 2 : 9. இந்த உலகத்திலே இயேசு கிறிஸ்துவின் அடிச் சுவடுகளேப் பின்பற்றி நடக்கிறவர்களுக்கு தேவன் ஆயத்தம் பண்ணியிருக்கிற, மறுமைக்கடுத்தக் காரி யங்களே விவரிக்கப் போதிய உலக மொழிகள்

Copyright ANCP

இல்லை!

மரணத்தைக் காட்டுகிற பயங்கர எலும்புக் கூட்டுக்குப் பதிலாக இந்தப் படத்தில், தெய்வச் செய்தியை அறிவிக்கும் தேவதூதன் காணப்படு




10. மகிமையாக விண் வீடு ஏகுதல்

கிறான்! நீதிமானாக்கப்பட்ட ஆத்துமாவைத் திரும்ப தேவனிடத்தில் கொண்டுச் சேர்க்க தூதன் காத்து

நிற்கிருன்! ஆவியும் ஆத்துமாவும், அழிவுக்குரியக் கூட்டிலிருந்து விடுவிக்கப்பட்டு, இந்த உலகத்தில் யாரை நேசித்து, அவருக்காக வாழ்ந்து மரித்தானே, அவருடைய திருமார்பில் போய்ச்சேர திறந்த மோட்ச வாயில் வழியாகப் பறந்துச் செல்லுகிருன்! தேவனுடைய சந்நிதானத்தில், பின்வரும், ஆதரவளிக்கும் புகழ் வார்த்தைகளோடு, அவனுடையக் கர்த்தரும் ஆண்டவருமானவர் அளிக்கும் மகிழ்ச்சியான வரவேற்பு காத்துக்கொண்டிருக்கிறது, "நல்லது உத்தமமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி.'' மத். 25 : 21. சாத்தானுக்கு அவன் மேல் எவ்வித வல்லமையும் கிடையாது. ஏனென்ருல், "கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.'' சங். 116 : 15. "பரலோகத்திலிருந்து ஒரு சத்தமுண்டாகக் கேட்டேன்; அது, கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இது முதல் பாக்கியவான்கள் என்றெழுது; அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள், அவர்களுடைய கிரியைகள் அவர்களோடே கூடப்போம்.'' வெளி. 14 : 13.

## இறுதி அறிவுரை

இந்தப் புத்தகத்தை வாசிக்கும் நேயரே! உங்களை நேசிக்கும் இயேசுவுக்கு உங்கள் இரு

தயத்தைக் கொடுக்க தேவன் உதவிப் புரிவாராக! "என் மகனே! என் மகனே! உன் இருதயத்தை எனக்குத்தா." நீதி. 23 : 26. என்று அவர் உன்னிடத்தில் வற்புறுத்தி வேண்டுகிருர். உன்னுடையத் தொய்ந்துப் போன, ஏமாற்றமடைந்த, வேதனையுள்ள இருதயத்தை அவருக்கு ஒப்புவி. அவர் உனக்குள்ளே ஒரு புதிய ஆவியையும், இருதயத்தையும் கொடுப்பார்! உன் வஞ்சனையுள்ள இருதயத்தால், நீ வஞ்சிக்கப்பட்டு அதன் இச்சைகளுக்கு இணங்காதே! "தன் இருதயத்தை நம்புகிறவன் மூடன்; ஞானமாய் நடக்கிறவனே இரட்சிக்கப்படுவான்." நீதி. 28 : 26 உன் பாவங்களை விட்டு விட்டு நீதியைப்பற்றிக்கொள், ஏனென்ருல், 'பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுல் உண்டான நித்திய ஜீவன்" ரோ. 6 : 23. தேவனுக்கு உங்கள் வாழ்க்கையை ஒப்புக்கொடுத்து, "நீ கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தோடும் அன்போடும் என்னிடத்தில் கேட்டிருக்கிற ஆரோக்கியமான வசனங்களின் சட்டத்தைக் கைக்கொண்டிரு." ஏனென்ருல் பவுல் அப்போஸ்தலன் காரணம் காட்டுகிறபடி, "நான் இந்தப் பாடுகளையும் அனுபவிக்கிறேன்; ஆயினும், நான் வெட்கப்படுகிறதல்லை; ஏனென்ருல் நான் விசுவாசித்திருக்கிறவர் இன்னுரென்று அறிவேன், நான் அவரிடத்தில் ஒப்புக் கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிருரென்று நிச்சயித்துமிருக்கிறேன்.'

Copyright ANGP

ii தீமோ. 1 : 12,13 மிகுந்தப் பரிசுத்த விசுவாசத்திலே, உங்களை ஊன்றக் கட்டிக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணி கர்த்தருடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்றுச் சொன்னவரும், இராஜாதி இராஜாவும், கர்த்தாதி கர்த்தாவும், தம்முடையவர்களைத் தம்மிடத்தில் அழைத்துக்கொள்ளச் சீக்கிரம் வருகிறவருமாகிய, கிறிஸ்து இயேசுவையே நோக்கிப் பாருங்கள்!

"வழுவாதபடி உங்களைக் காக்கவும், தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும், தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக. ஆமென்!" யூதா. 24,25.

முற்றிற்று.

தமிழாக்கம் :—

பாஸ்டர், விக்டர். பீ. டீ. கே.

"பெத்தேல்" தஞ்சாவூர், இந்தியா.

Copyright ANGP

## A SPECIAL WORD FROM ANGP
## UN MONDE SPÉCIAL DE L'ANGP
## UMA PALAVRA ESPECIAL DA ANGP

This booklet "The Heart of Man" is available in over 538 languages and dialects spoken throughout the world (Africa, Asia, The Far East, South America, Europe, etc.) Our Heart Book is now also available on cell phones, tablets, etc from www.angp-hb.co.za or as an APP "Heart of Man" on Android phones.

Le livre du "Coeur de l'homme" peut etre obtenu en plus de 538 langues et dialectes parles dans le monde entier, a savoir: Afrique, Amerique, Asie, Extreme Orient, Europe. Notre Livre du Coeur est maintenant aussi disponible sur votre Telephone cellular, plaques, etc. de www.angp-hb.co.za ou comme une Application "Heart of Man" sur telephones Android.

Este livro "O Coracao do Homem" e obtfdo em mais de 538 linguas e dialectos falados em todo o mundo, a saber: (Africa, Asia, America do Sul, Extremo Oriente, Europa, etc). O nosso Livro O Coração do Homem tambem esta agora disponivel em telefone celular, tablets, etc. de www.angp-hb.co.za ou como um aplicativo "Heart of Man" nos telephones celulares Android.

Copyright ANGP

The 10 heart pictures contained in this booklet are also available in the form of large coloured picture charts (86 x 61cm) bound together in a set of 10 pictures. These "Heart Charts" can be obtained with European or African features and are particularly suitable to be used in conjunction with the Heart Book for class-teaching, open air evangelization etc. Kindly contact us to ascertain the latest subsidized price of this chart.

Les 10 images du coeur qui figurent dans ce livre peuvent etre obtenues en tableaux de couleur, format 86 x 61 cm, avec des physionomies europeennes ou africaines. Ils peuvent etre utilises en meme temps que le livre du coeur pour des classes bibliques, a

l'ecole du dimanche ou lors de reunions de plein air. Soyez aimable de nous contacter pour assurer les derniers prix en cours du tableau.

As 10 imagens do coracao, contidas neste livro podem ser obtidas num conjunto de 10 imagens em colorido no tamanho de (86 x 61 cm). Estes "Cartazes do Coracao podem ser obtfdos com caracterfsticas Europeias e Africanas e podem ser usados em conjuncao com o mesmo livro em classes de ensino biblico, evangelizacao ou ao ar livre. Agradeciamos que nos contacta- se para confirmacao do ultimo preco dos cartazes.



Copyright ANGP

Kindly write to us if you are able to assist us with further translations of our free Gospel literature, informing us of the language into which you could translate this Gospel literature. Your assistance would be appreciated.

If you have found salvation in Christ, or have been otherwise blessed through our Gospel literature, please let us know. We would like to thank God with you, and remember you further in our prayers.

Nous vous invitons a nous contacter pour faire des arrangements concernant de nouvelles traductions de notre litterature, nous informant de la langue dans laquelle vous pouvez traduire cette litterature evangelique. Votre aide sera beaucoup appreciee.

Si vous avez trouve le salut en Christ ou si vous avez ete beni par notre litterature, nous vous prions de nous le faire savoir. Nous aimerions remercier Dieu avec vous et prier pour vous.

Nos vos convidamos a nos contactar, afim de fazer qualquer arranjo concernente a novas traducoes de nossa literatura em outras lfnguas. Vossa assistencia sera muito apreciavel.

Se tem encontrado a salvacao em Cristo, ou se tem sido abencoado por intermedio da nossa literatura evangelica, faca o favor de nos

informar. Pois nos gostarfamos de agradecer a Deus juntamente convosco, e lembra-lo sempre em nossas oracoes.

For free Gospel literature, books and tracts in over 538 languages, write to:

Pour obtenir gratuitement de la litterature evangelique, des livres et des traites en plus de 538 langues, ecrivez a:

Para obter gratuftamente a literatura evangelica, livros e folhetos em mais de 538 lfnguas diferentes escreva para:

E-MAIL: info@angp-hb.co.za
info@angp.co.za

**ALL NATIONS GOSPEL PUBLISHERS**
**P.O. Box 2191**
**PRETORIA**
**0001**
**R.S.A.**

Copyright ANGP

A Gospel Literature Mission financed by donations
Une Mission de litterature evangelique financee de dons
Missao de literatura Evanqelica financiada por donativos

(Reg. No. 1961/001798/08)